
முரசொலி
ஆசிரியர்: மு. கருணாநிதி
ரோமாபுரிப்
பாண்டியன்

கடமை தீர்த்துவிடும் வங்கம்! கண் விழித்திடுமோ திராவிடம்?

மக்களின் வரிப்பணத்தைப் பணமென்று பாராது ஓட்டாஞ் சில்லிகளாக ஓடைத் தண்ணீராக வாரியிறைத்திடும் 'பொறுப்பில்லாத் தன்மை' மந்திரிப் பொறுப்பை ஏற்றவுடனேயே நம் அமைச்சர்களுக்கு வந்து விடுகிறது.

பதவி எனும் பழைய மதுவைக் குடிக்கக் குடிக்க போகப் பொருட்கள் எவையெவை என்று தேடுகின்ற 'காங்கிரஸ் கனம்களை'த் தான் காணுகிறேமே தவிர, பொதுநலத்திற்காகப் பதவி தரும் இன்பங்களை 'ஒதுக்கி' வைத்தவர்களைக் காணோம்.

"சட்டம் இருக்கிறது நம் கையில்; யாராவது தட்டிக் கேட்டால் சுட்டுப் பொசுக்க வெள்ளைக்காரன் விட்டுப்போன துப்பாக்கிகள் நம்மிடம் இருக்கின்றன. ஐந்து வருடங்கள் வரை பயந்து நடுங்கத்தேவையில்லை, மக்களைக் கண்டு!"

—என்கிற மமதையிலே போகத்தில் புரள்வோர், பணத்தைக் கையாடுவோர், புதுப்புது இன்பத்தைத்தேடி அலைந்து கொண்டிருப்போர் — இவர்களைத்தான் நாம் காண்கிறேம், இன்றைய ஆட்சிப் பீடத்தில்!

"கொதிக்கும் வெய்யிலா? குடை பிடித்துச் சமாளிக்க முடியாத வெப்பமா?—அப்படியானல் புறப்படு 'குளுகுளு' வாசத்திற்கு; நீலமலைத் தொடரிலே நிலவுகிற அமைதி காண்போம்!—என்று புறப்பட்டார்கள் நம் அமைச்சர்கள்! அவர்களுக்குத் தம் மேனி கருகக் கூடாதே என்ற பச்சைச் சுயநலம்தான் இருந்ததே தவிர தம்மைத் தேர்ந்தெடுத்தோர், தம்முடன் பிறந்தோர் வளர்ந்தோர் கோடைத் தீயிலே கருகுகிருர்களே என்ற கருணை உள்ளம் மருந்துக்கும் இல்லை.

இருக்கும்வரை அனுபவிக்க வேண்டும் என்ற இழிகுண சித்தாந்தத்தைத் தங்கள் பாலபாடமாகக் கொள்கிற பண்பு இந்த மாநில அரசுக்கு மட்டும் இருப்பதல்ல!

காங்கிரஸ் எங்கெங்கு கொடி மரம் நாட்டிப் பதவி நாற்காலியில் குந்தியிருக்கின்றதோ அங்கெல்லாம் இந்த அநீதி நடந்து கொண்டே தான் இருக்கிறது.

ஆம், வங்கத்திலே நடந்திருக்கிறது 'உதகைமண்டலம்!' வெய்யில் தாளாத இந்தத் தேசீயக் காங்கிரஸ் வெள்ளை மேனிகள் மலைவாசம் தேடி ஓடியிருக்கிருர்கள், விரைக்க விரைக்க!

தமிழ் நாட்டைப்போல் சட்டசபையிலே தீர்மானம் கொண்டு வரவில்லை. 'எதிர்க் கட்சிகள்' அனைத்தும் ஒப்புக் கொண்டால் தான் உதகை போவோம்-என்று 'நம்பிக்கை' தரவில்லை.

"ஆரன்மூர் அரண்மனை வாங்கியாகி விட்டது; இனி நாம் அங்கு போக வேண்டியதுதான் பாக்கி!"—என்று ஆனந்தத்தோடு கூறியபோது திராவிட முன்னேற்றக் கழகம் காட்டிய ஊட்டி செல்வது பற்றிய எதிர்ப்பை உதாசீனப் படுத்திவிட்டு முன்புசொன்ன சொல்லைக் காற்றில் பறக்க விட்டு, நம்பிக்கைப்பேச்சை முறித்துக்கொண்டு ஓடிய இந்த மாநில அரசைப் போல் அந்த வங்காள அரசு நடந்து கொள்ளவில்லை.

ஆனல்...

அமைச்சர்கள்,

துணை அமைச்சர்கள்,

அமைச்சரின் செயலாளர்கள்,

துணைச்செயலாளர்கள்,

குறிப்பெழுதுவோர்,

பியூன்கள்

—ஏறக்குறைய மூன்று டஜன் பேர்கள் மேற்கு வங்காள அரசினரின் செலவில் மலை வாசஸ்தலமான டார்ஜிலிங்கிற்குப் போயிருந்தார்கள்.

ஏழை மக்களுக்காகக் கண்ணீர் சிந்தி, அவர்தம் வறுமையை விரட்டப் பாடுபடுவதாகக் கூறிக் கொள்ளும் வங்க அரசு, அதே ஏழை மக்களின் வரிப்பணத்தை விணடிக்க மலை நாட்டுக்கு வந்திருக்கிறது!

ஒரு வேளை சென்னை அரசினரின் 'முன்மாதிரியை'ப் பின்பற்றி சட்டசபையையும் டார்ஜிலிங்கிற்கு மாற்றலாம் என்ற எண்ணத்தை இதயத்தின் ஆழத்திலே பதுக்கி வைத்துக் கொண்டு மலை வளம் காண வந்தனரோ என்னவோ என்று நினைத்துப் பத்திரிகை நிருபர்கள் வளைத்துக் கேள்வி கேட்க ஆரம்பித்தார்கள், அவர்களை!

'நீங்கள் டார்ஜிலிங்கிற்கு வர வேண்டிய அவசியமென்ன?'—என்ற கேள்விக்கு ஒரு அமைச்சர் விடை தந்தார். அவரது விடை நமது மதிப்பிற்குரிய கக்கனரை நினைவுபடுத்தியது.

"நாங்கள் இந்த மலை நாட்டிற்கு வந்தது இங்குள்ள மக்களின் நிலையை அறிய; அவர்கள் பொருளாதார வாழ்வில் மாற்றம் காண!"

—இந்தப்பதிலைத்தந்த அமைச்சர் அதோடு நின்று விடவில்லை. நகைச்சுவையை அங்கு உண்டு பண்ண வேண்டுமென்ற எண்ணத்தில்,

"இங்கு நாங்கள் ஒரு திருவிழாவையே நடத்தப் போகிறேம் என்று கூட நீங்கள் சொல்லலாம், அப்படிச் சொல்வதில் உங்களுக்கு விருப்பம் இருக்குமென்றல்!"

—என்றுகூறினராம்.

உழைத்து ஓடாகிக் கிடப்பவனிடம் பிடுங்கப்பட்ட வரிப்பணத்தில் இவர்கள் திருவிழா நடத்துகிருர்களாம்!

வெள்ளையன் காலத்தில் அவனுடைய டார்ஜிலிங் பயணத்தைக் குறை கூறிய இவர்களே—

அன்னியனின் ஆடம்பர அக்ரமத்தை அடுக்கடுக்காகச் சொன்ன இவர்களே—

மலைவாசம் செல்கிருர்கள் வெய்யிலால் 'நிறம்' குலைந்து விடாமலிருக்க!

ஏழை மக்களின் வரிப்பணத்தை இப்படி வீணுக்குவதில் மட்டும் இவர்களின் 'காட்டுத்தனமான ஆசைகள்' நிறைவேறிவிடுவதில்லை.

குறைகூற வருவோரின் ஏக்கம் நிறைந்த இதயங்களில் ஈவிரக்கமற்ற அலட்சியத்தைப் பாய்ச்சுவதில் இன்பம் காண்கிருர்கள்.

'ஐயா, எங்கள் தொழிலின் வருமானம் இது. விலைவாசிகள் நாங்கள் எட்டிப் பிடிக்கமுடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே நெஞ்சில் கொஞ்சம் இரக்கம் காட்டி உயர்திடுக சம்பளத்தை!' என்று கேட்ட பள்ளியாசிரியர்களைத் தடுத்தி நிறுத்தியிருக்கிறது, வங்க நாட்டு அரசு, அழுகும் பொருள் வியாபாரிகளையும் இன்ன பிறரையும் குறைகூற அனுமதிக்காத இந்த அரசினரைப் போலே!

வங்கத்தில் இந்த இரண்டு பிரச்னைகள் மக்கள் மனதில் புதியதோர் கலக்கத்தை உண்டாக்கியிருக்கின்றன — பத்திரிகைகள் இதுபற்றி பரபரப்படைந்துள்ளன.

மண்டை பிளக்கும் வெய்யிலால் மக்கள் அவதியுற்றலும் பரவாயில்லை. நாங்கள் குளிர் காற்றில் குளித்துக்கொண்டிருந்தால் போதும் என்ற எண்ணத்தில் டார்ஜிலிங்கிற்குப் போயிருக்கிறது, வங்க நாட்டு மாநில அரசு!

பள்ளிக்கூட ஆசிரியர்களைத் தடுத்து நிறுத்தி, தடியை உயர்த்திக் காட்டிப் பயமுறுத்தி திருப்பியனுப்பியிருக்கிறது. என்றலும் தீவிரத்திற்குப் பெயர் போன வங்காளிகள் இந்தச் சம்பவங்களை நினைவில் வைத்துக் கொண்டு காங்கிரஸ் அரசைப் பழி வாங்காது விடமாட்டார்கள்!

ஆட்சியாளர் செய்கிற ஒவ்வொரு கொடுமைக்கும் தீர்ப்பு வழங்குவதில் தன்னிகரற்றது வங்கம்!

அதன் பேரேட்டிலே, டார்ஜிலிங் பயணத்தையும், ஆசிரியர்கள் குறைகளைக் கேளாமல் அனுப்பியதையும், குறித்து வைத்துக் கொண்டிருக்கிறது.

இந்த அநீதிகளுக்கு வங்க எரிமலை இரண்டு தடவை வாய் திறந்து தீக்குழம்பைக் கக்கியே தீரும்.

வடவருக்குத் தென்னகத்தைச் சந்தையாக்கிய துரோகம்—சென்னையை இன்னும் 'தமிழகம்' ஆக்காதிருக்கும் மமதை — மக்கள் குரலை மதியாது ஊட்டி மலைக்குச் சென்ற அநீதி—இவை போன்ற ஆயிரமாயிரம் அநீதிகளைத் தாங்கிப் பழக்கப்பட்ட திராவிட எரிமலையின் அடிவயிற்றில் என்றுதான் குமுறல் கேட்குமோ?

அதன் வாய் மூடி என்று கழன்று விழுமோ?

இதுவரை அனுபவித்து வந்த அநீதிகளுக்கெல்லாம் சேர்த்து விடுதலைக் கிளர்ச்சி எனும் தீக்குழம்பை என்று கக்குமோ?

—திருப்பூர் அடியார்

நகரத்தில் நடப்பவை :

இது சாதனை ... ...இது வேதனை!

வெள்ளி 22—5—59 சென்னை

சாகுபுரமா? 'சாவு'புரமா?

எரிமலையாய் வெடிக்கிறது, ஈரமுள்ள இருதயம்!

அக்கினிச் சாற்றைக் கக்குகின்றன, அழகுமிழ்ந்த கண்கள்!

துடிக்கும் உடலைத் தடுக்க அரணில்லை!

தோடுக்கும் கணைகள் தோகையற்றுப் பறக்கின்றன!

ஆனாலும்... அந்தோ! அந்த எக்காளச் சிரிப்பொலி ஓயவில்லையே! இனி எக்காலமும் எமைத் தடுப்பார் எவருமில்லை—என்று மார் தட்டும் கொடியவர் முழக்கம் மலைமோதும் எதிரொலியாய் — குலை நடுக்கும் 'பேய்க் குர'லாய்—ஒலிக்கின்றதே!

எங்கிருந்து கிடைத்தது அந்த ஆணவம்? எம் குரல் மதிக்கத் தெரியாதோருக்கு உரம் கொடுத்தது யார்? அடங்கும் ஆமை யென்று கருதினரோ; அன்று ஊமை யென்றுதான் உளுத்துப்போன மேனியை உதறிக்கொண்டு பாய்கின்றனரோ — இப்படித்தான் எப்படியும் தமிழ் காக்கும் திறன் படைத்த பெரும் படை கேட்கிறது!

எத்திசையும் எழும்பும் இந்த எதிர்ப்பொலிக்கு முன்னேயும்...

அன்றலர்ந்த பூங்கொடியை அறுத்தெறிய கொடிய கரம் நீளுகிறது!

பொய்கைக் கமலத்தைப் பிய்த்தெறிய மத யானை தாவுகிறது!

பொன்னவிர் மேனியாளின் கண்ணவித்து—கன்னம் கிழித்து—கருங் கூந்தல் வெட்டி—பருவத்தின் எழிலைக் கொடிய பருந்துக்கு உணவாக்கப் பாய்கிறது, நச்சுக் கருவி!

தமிழ் மாதாவின் கழுத்துக்குச் சுருக்குக் கயிறெடுத்து வருகின்ற தருக்கர்கள், தட்டி விடுகின்றார்கள், தருணம் பார்த்திருக்கும் புலிக் கூட்டத்தை! சிலிர்த்து நிற்கும் சிங்கப் படைக்குமுன் சிறு நரி போல் வாலாட்டுகிறார்கள்!

தெற்கே கொடி நாட்ட வந்தோரெல்லாம் அன்று பொடியாகப் போயினர்! படை நடத்திப் பாய்ந்தோரெல்லாம் பாடையற்ற பிணமாய் வாழ்வுப் பயணத்தை முடித்தனர்!

சரித்திரத்தில் இத்தகைய விசித்திரத்தைக் காட்டியோர் முன்புதான், இன்று சட்டத்தை நீட்டியும்—கோட்டத்தை அடக்குவேன் என்று தோட்டாவைக் காட்டியும் துணிந்துவரத் துவங்குகின்றனர்!

ஆதிக்கமேதும் எம் அருகே வந்தது கிடையாது; வந்தாலும் வென்றது கிடையாது — என்று வரலாறு சமைத்தவர்களின் வாழ்விலே இன்று வடக்கத்தி ஏகாதிபத்தியம் தன் வலுவான பாதத்தை வைத்து அழுத்துகிறது!

நள்ளிரவில் நுழைகின்ற கள்ளனைப்போல் உள்ளத்தைக் கறுப்பாக்கிக் கொண்டவர்கள் — எண்ணத்தை நெருப்பாக்கிக் கொண்டவர்கள் — ஊன்றிய கால் உறுதிபெற தேடிய வழிகள் ஏராளம்! ஒன்றல்ல; இரண்டல்ல; குன்றிலிட்ட தீயைப்போல் குவலயத்திற்கு மானச் சுடர் வழங்கிய இனத்தைக் குலைத்துப்போட எடுத்துவிட்ட முயற்சிகள் எண்ணற்றவை!

அந்த எல்லையில்லாப் பட்டியலிலே ஓர் அங்கம்தானும் — இன்று நெல்லைச் சீமையிலே தோன்றிக்கொண்டிருக்கும் 'சாகுபுரம்'! நீதி வரண்டுபோன உள்ளத்தவர்கள், சுரண்டுகின்ற பூமியாம் தமிழகத்தின் ஒரு பகுதிக்கு இப்படி ஒரு பெயர் சூட்டுவானேன் — என்று கேட்கிற நேரத்தில்தான் புலப்படுகிறது, உள்ளே புகுந்திருக்கும் சூதுக் கருத்து!

வடக்கேயிருந்து வாணிபம் செய்ய வந்தார், ஒரு தொழிலதிபர்! அவர் ஆலை அமைக்க இடமொன்றை அளித்தது அரசு, திருச்செந்தூருக்கும் தூத்துக்குடிக்கும் இடைப்பட்ட பூமியில்! கோடி இரண்டைத் தூக்கி எறிந்தது டெல்லி மூல பீடம், அவரது துவக்க மூலதனமாக! அதோடு மட்டுமல்ல; தமிழன் மானத்தையும் அவர் விரித்த மடியிலே வீசி எறிந்துவிட்டது, இப்போது!

'சாகு ஜெயின்' — இதுதான் அந்த வாணிப முதலையின் பெயர்!

'சாகுபுரம்'—அவர் வதிகின்ற பகுதிக்குப் புதுப் பெயர் இது — வழங்கியிருக்கிறது டெல்லி; வரவேற்க இருக்கிறது தமிழகத்தின் அரசு!

இருக்கலாமா இப்படி யொரு பெயர்? துயரத்தின்மேல் துயர் சுமத்தும் துரோகத்தின் சாயல் படிந்த இந்தச் செயலை வரவேற்கலாமா? சொந்த நாட்டிலே—சுந்தரத் தமிழ் நடக்கும் மண்ணிலே—வந்தவரின் பெயர் நிலைக்க வழி வகுக்கலாமா?

நொந்துபோன நெஞ்சத்தினர், வெந்துபோன உள்ளத்திலே புதிய வேல் பாய்ச்சும் பண்பு கண்டு துடித்துக் கேட்கின்றனர். படித்தோர்; பட்டம் பெற்றோர்; எழுத்தறிவற்றோர்—ஆனால் எதையும் பகுத்தறியும் பண்பு பெற்றோர்; பல்லாமே் பருவத்தார்; எடுத்துச் சொன்னால் தள்ளாடும் தமிழ் பேசும் மழலைகள்கூட "ஏனிந்த முடிவு?" என்று கேட்கத்தான் செய்கிறார்கள்.

"டால்மியாபுரம் என்ற வடநாட்டான் பெயரிட்டு அழைக்கும் ஆணவத்தை எதிர்த்து திராவிட முன்னேற்றக் கழகம் கிளர்ச்சி செய்திருந்தது நாடறிந்ததே; நாடாள்வோரும் அறிந்ததே! இருந்தும் மீண்டும் ஒரு வட நாட்டுப் பெரும் முதலாளியின் பெயரால் சாகுபுரம் எனப் பெயரிடுவதை நாங்கள் வன்மையாகக் கண்டிருக்கிறோம்!"

— என்று சென்ற கிழமை தென்காசியிலே கூடிய தீரர் முகாம் — நெல்லை மாவட்ட தி. மு. கழக மாநாட்டிலே தீர்மானம் தீட்டியிருக்கிறது!

இத்தனை எதிர்ப்புக்கும் பிறகு, இனி எத்தனை நாள் அந்தப் பெயரை வாழவிடப் போகிறார்கள் அரசினர் என்பதுதான் இன்று எங்கும் எழுகின்ற வினா! இந்த வினாவுக்கு விடை யென்ன கிடைக்கப் போகிறது என்பதிலேதான் சாகுபுரத்தின் எதிர்காலமும் அடங்கியிருக்கிறது!

எதையும் எதிர்க்கும் பண்புள்ளவர்களே; நீங்கள் பேராசை எனும் தொழு நோய் பிடித்தவர்கள்—என்று அரசினர் தூற்றலாம்!

ஒப்புக்கொள்ளுகிறோம்; பேராசைக்காரர்கள்தான்—வேண்டாதோர் பாசறையிலிருந்து பாய்ந்துவரும் வேல், முதலில் துண்டாடட்டுமே என் மார்பை என்பதே அந்த ஆசை! நாட்டின் புகழ் காக்கப் புறப்பட்டவர்களின் தியாகப் பட்டியலிலே என் பெயரும் இடம் பெற வேண்டுமே என்பதே அந்த ஆசை! தாயகத்தின் தூய வரிகளை எழுதிட, துடித்துக் கிடக்கும் என் தலையிலிருந்து கொப்பளித்துக் கிளம்பும் குருதியும் பயன்பட வேண்டுமே என்பதே அந்த ஆசை!

இந்தப் பேராசையின் பொருள் உணர வேண்டும், 'நாராச'ச் சொல்லை நாம் பிறந்த மண்ணுக்கிடுபவர்கள்!

ஏனெனில், தமிழ்த் தாய் பெற்றெடுத்த வீரப் புதல்வர்களின்...

மனத்திலே வலுவுண்டு, மானம் காக்க!

மார்பிலே இடமுண்டு, குண்டு பாய!

இந்த மண்ணிலே பலருண்டு, பிணமாகச் சாய!

—வாய்ச் சொல் வீரமல்ல இது; வரலாற்றுச் சுவடியின் தூசி படிந்த ஏடுகளைத் தட்டி விட்டுப் பாருங்கள்; உங்கள் மாசு படிந்த கண்களுக்கு முன்னே 'கல்லக்குடி' தெரியும்! அங்கே களம் அமைத்த காட்சி புலப்படும்! கடமையைக் காக்க புடம் போட்ட தங்கங்கள் இரண்டு பிணமாகச் சாய்ந்த பெருண்மையும் துலங்கும்!

ஆகவே, தமிழக அரசினரே! 'சாகுபுர'த்தை மாற்றப் போகிறீர்களா? அல்லது அதைச் 'சாவுபுர'மாக ஆக்கப் போகிறீர்களா? உங்களது பெருந்தன்மையைத்தான் தமிழகம் பேரார்வத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது!

ஃ

தூக்கி நிறுத்திவிடுமோ ஆக்கவேலை?

தி. மு. கழகம்: என்னப்பா காங்கிரஸ்! கையிலே என்ன வைத்திருக்கிறாய்? மறைத்திருக்கும் நிலையைப் பார்த்தால் எனக்கு சந்தேகம் தோன்றுகிறது, தோழனே!

காங்கிரஸ்: இடமில்லை அதற்கு! ...இது எங்கள் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ராசாராம் (நாயுடு) அனுப்பிய சுற்றறிக்கை!

தி. மு. க: என்ன ஏதாவது புதுச் செய்தியா?

காங்; தெரியாதவன்போல் கேட்கிறாயே: தினசரிப் பத்திரிக்கைகளிலெல்லாம் வந்திருந்ததே இச்செய்தி!

தி. மு. க: ஆமாம்; அதற்காகத்தானே சில ஏடுகளே நடக்கின்றன.........அதாவது தமிழ்நாடு காங்கிரசுக்குப் புத்துயிர் கொடுக்கப் போகிறேன் — என்று பேசியிருந்தாரே; அதுவா?

காங்: ஆமாம்.......ஆமாம்! எப்படியிருந்தது அவர் பேச்சு?

தி. மு. க : ஆகா.........சொல்ல வேண்டுமா? ஆனால் அவர் காங்கிரசிற்குப் புத்துயிர் கொடுக்க வேண்டுமென்றல்லவா பேசியிருந்தார்...?

காங்: ஆமாம்; அதிலென்ன உனக்கு சந்தேகம்?.

தி. மு. க: இல்லை; காங்கிரசினுடைய பழைய உயிர் என்னாயிற்று? மாண்டு மடிந்து விட்டதோ என்ற சந்தேகம் வந்துவிட்டது, எனக்கு!

காங்: இந்தாப்பா; இப்படியெல்லாம் கேலி பேசாதே! அகில இந்தியக் காங்கிரசினுடைய பலம் உனக்குத் தெரியாது!

தி. மு. க: அதற்கு உண்மையான பலமிருந்தால்தானே என் கண்களுக்குத் தெரியும்? அகில இந்தியக் காங்கிரசிற்கு உள்ளபடியே பலமிருந்தால், கேரளாவிலே காங்கிரஸ் ஆட்சிக் கொடி முறியுமா? டில்லி, பம்பாய், சென்னை போன்ற நகரங்களில் எதிர்க்கட்சி மேயர்கள் வரமுடியுமா? ஒரிசாவிலுள்ள கணதந்திர பரிஷத் என்ற எதிர்கட்சிக்குக் காங்கிரஸ் பாதம் தாங்குமா? இல்லை; தமிழ்நாட்டுக் காங்கிரஸிற்குப் 'புத்துயிர்' ஊட்டப போகிறேன் என்றுகூறி தங்கள் உடைந்து போன அரசியல் வாழ்க்கையை எடுத்துக் காட்டுவாரா, உங்கள் தலைவர்?

காங்: நிறுத்து! நிறுத்து! சும்மா அடுக்கிக் கொண்டே போகிறாயே? ஏதோ சிற்சில இடங்களில் தோற்றுவிட்டால் எங்கள் கதையே தோல்விக் கதையாகிவிடுமா?

தி. மு. க: ஆமாம்.........தோல்வியே கண்டறியோம் என்று கூறிய நீங்கள் தோல்வி முகம் காண ஆரம்பித்திருக்கிறீர்கள்! அதாவது இன்னும் விளக்கமாகச் சொன்னால், நீங்கள் இப்போது இருந்ததை இழந்திருக்கிறீர்கள்! சென்னையைப் போன்ற சில நககங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் இல்லாததைப் பெற்றிருக்கிறது!

காங்: என்ன இது இருந்ததும் இல்லாததும்?

தி. மு. க: அதாவது, திராவிட முன்னேற்றக் கழகத்தை அறிஞர் அண்ணா அவர்கள் வாதத்திற்காக ஒப்பிடுவாரே பருவ மங்கைக்கு, அத்தப் பருவ மங்கை தன்னிடம் இல்லாத ஒன்றை—'தாலி' என்றுதான் வைத்துக் கொள்ளேன் — அதைப் பெற்றிருக்கிறாள்! ஆனால் காங்கிரசோ இருந்த 'அதை' இழந்து விட்டது என்றேன், உன் கூற்றுப் படியே! புரிகிறதா இப்போது?

காங்: இதெல்லாம் வாய்ப் பேச்சு; வெறுங் கனவு!

தி. மு. க: நான் கூறுவது தவறென்றால்—தோல்வியால் நீங்கள் துவளவில்லையென்றால் உங்கள் தலைவர் ஏன் இந்தப் 'புத்துயிர்' அறிக்கை விட வேண்டும்?

காங் : அது...அது...

தி. மு. க : திணறாமல் பதில் சொல் நண்பா! புத்துயிர் எப்படித் தரப்போகிறாராம் உங்கள் தலைவர்?

காங்: ஆக்க வேலைகளில் ஈடுபடுத்தப் போகிறார் எங்களை!

தி. மு. க : அப்படியென்றால்...?

காங் : காங்கிரசைத் தூக்கி நிறுத்தும் ஆக்க வேலைகளாக்கும்!

தி. மு. க : அதாவது புதிதாக 'கிரேன்'களுக்கு . ஆர்டர் கொடுத்திருக்கிறாரா?

காங் : இல்லை; இல்லை! கிராமச் சேவை செய்தல், கிராமச் சிறு தொழில்களை ஆதரித்தல், கதர் நூற்றல், நெய்தல்...

தி. மு. க : இதெல்லாம் ராசாராம் கண்டுபிடித்த புதுத் திட்டங்களல்லவே! முப்பது வருடங்களுக்கு முன்னரே காந்தி சொன்ன திட்டங்களாயிற்றே?

காங் : ஆமாம்...ஆமாம்!காந்தி வழிப்படி இனி நடந்தால் தான் விடி மோட்சம் உண்டு என்று கண்டு பிடித்துவிட்டோம்!

தி. மு. க : அட, கொலம்பசின் வாரிசுகளே! அப்படியானால் மலிவுப் பதிப்பில் காந்தியாரின் பொன்மொழிகள் புத்தகம் ஒன்றை வாங்கிக் கொண்டு விட்டாயா?

காங் : அதெல்லாம் எதற்கு?—அதோ...அன்று காந்தியாரின் வெண்கலக்குரல் எழுப்பிய நாதம் இன்றுகூட என் செவிகளில் விழுந்து கொண்டிருக்கிறதே! இனியேனும் அந்தத் துண்டு கட்டிய தூய்மையாளரின் சொற்களின்படி அமைத்துக்கொள்ள மாட்டோமா எங்கள் வாழ்க்கையை? அதற்காகத்தானே அவர் சிலைகளைக் கூட ஓயாமல் திறந்துகொண்டிருக்கிறோம்?

தி. மு. க : நல்லது நண்பா; நீ கூறுகிறபடி இனிமேல் காந்தியாரின் சொற்படிதான் நடக்கப் போகிறீர்களல்லவா?

காங் : சந்தேகமென்ன அதிலே; சங்கல்பமேஎடுத்துக்கொண்டு விட்டோமே....!

தி. மு. க: அப்படியானால், காந்தி சொன்ன முதற்காரியத்தையே நீங்கள் இன்னும் செய்யவில்லையே?

காங்: ஆங்....காந்தி சொன்ன முதற் காரியமா? என்ன அது?

தி. மு. க: காங்கிரசைக் கலைத்து விட்டு மறுவேலை பாருங்கள் என்று சொன்னாரே; அந்தக் காரியத்தை யல்லவா நீங்கள் முதலில் செய்திருக்க வேண்டும்; அதையேன் செய்யவில்லை?

காங்: ......?

தி. மு. க: ஏன் மௌனம்? இதற்காவது பதில் சொல் நண்பா! இந்த ஆக்க வேலைக் காரியத்தையும் நீங்கள்தான் தனியாகச் செய்கிறீர்களா; கூட்டு ஏதாவது உண்டா?

காங்: உண்டு!

தி. மு. க: எந்தக் கட்சிக்காரர்கள்?

காங்: 'காதி கிராமக் கைத் தொழில் போர்டு' — எனும் அரசாங்க உதவிபெறும் ஸ்தாபனம்!

தி. மு. க: ஓ...அரசாங்கத்துச் சம்பளத்தில் உயிர் வாழ்வோர் துணைகொண்டு, இறந்துவிட்ட காங்கிரஸ் உயிரைப் புதுப்பிக்கப் போகிறீர்களா? அரசாங்கப் பணியாளர்கள் அரசியல் கட்சியுடன் தொடர்பு கொள்ளக் கூடாது என்று ரோஜாமாலைகளுக்கும், சோடா புட்டிகளுக்குமிடையே அறிவுரை கூறும் உங்கள் காங்கிரஸ் அமைச்சர்கள் இதற்கென்ன பதில் கூறப்போகிறார்கள்? ஒரு அரசியல் கட்சி அரசாங்க உதவி பெறும் ஸ்தாபனத்துடன் தன் செல்வாக்கை வளர்த்துக் கொள்வது நியாயமா? காந்தியார் சொன்னபடி கலைத்தெறிய வேண்டிய காங்கிரசிற்கு, நீதி நேர்மையற்ற முறையில் புத்துயிர் ஊட்ட முயல்வது சரியா? நீங்கள் அடிக்கடி கூறிக் கொண்டிருக்கும் 'சத்தியத்திற்கு' இது உடன்பட்டதா? என்ன, என்ன? நில், நண்பா! எங்கே ஓடுகிறாய்?



பேனா ஓவியம்... [பக்கம்-5]

பேனோவியம்

புயலில் அசையாத நெடுமரமாம் - சீனத்தின் புதிய தலைவர்!

அரசியல் உலகிலே நடமாடுகின்ற இரண்டு ரகமான மானிடப் பிறவிகளை வரலாறு கண்டிருக்கிறது!

நாட்டிலே நச்சரவங்கள் நெளிந்தோடுகிற நேரத்தில்—கச்சை கட்டிக் களம் குதிக்கும் கடமை வீரர்கள் ஒரு ரகம்!

போராடப் பயந்தவர்களாய்; மக்களினம் வேரோடு அழிந்தால் நமக்கென்ன—என்று உண்டு உறங்கி உல்லாசத்தோடு வாழும் தாயக விரோதிகள் அடுத்த ரகம்!

முன்னவர்களுக்கு வரலாற்றிலே என்றும சாகாத வரவேற்புண்டு; மற்றவர்களுக்கோ 'மக்கள் நலன் பேணு சதைப் பிண்டங்கள்' என்ற இழிமொழிப் பட்டங்கள்தான் நிலைத்து நிற்கும்!

நாடும் ஏடும் பாராட்டுகின்ற நல்லவர்களில் ஒருவராகத்தான் இன்று செஞ்சீனக் குடியரசின் தலைவராக வீற்றிருக்கிறார், லியூ—ஷோ—சி!

பிணவாடை வீசுகின்ற போர்க்களமா? வேண்டேன்; வேண்டேன் — என்று பணமாதைத் தழுவிக் கிடந்தவரல்ல அவர்—

தாயகத்தின் எழுச்சிக்கு என் தலை கொடுக்கத் துணிவேன்—'கறுப்பு' சிறிதுமற்ற என் உளளம் உடலின் உறுப்புகளை அறுத்துக் கொடுக்கவும் தயங்காது—என்று தோள்தட்டிப் பாய்ந்த மாவீரர்களுக்கு மத்தியில் அரசியல் உணர்வற்ற மரக்கட்டையாய்; சுதந்திர வெறியற்ற சோற்றுப் பிண்டமாய் வளர்ந்தவரல்ல அவர்—

கொலை விழுகின்ற நேரத்திலே இலை மறைவுக் காயாய்; பின் நிலைமாறும் நேரத்தில் பதவிக்கு விலைபேச வருகின்ற அரசியல் வணிகர்களைக் காணுகிறோமே இங்கே — அத்தகைய சூதாட்டத் தருவின் முற்றிய பழமல்ல அவர்—

இன்று பெரும் பொறுப்புக்கு வருகிறார்; நல்ல உரம் பெற்று வருகிறார்; அந்த உரம்பெற அவர் ஆற்றிய உழைப்பு பொது வாழ்வுத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தேவையான நல்ல பாடம்!

உலக அரங்கிலே இன்றுதான் தெரிகின்ற அந்தப் பெயருக்குரிய வயோதிகரோ, தான் வாழ்ந்த காலமெல்லாம் சியாங் கேய் ஷேக்கின் சிம்ம சொப்பனமாகவும் செங்குருதியால் சீன மண்ணில் கப்பிக் கிடந்த கறையைத் துடைத்தவருமான மா-சே-துங்கின் வலக்கரமாக இருந்திருக்கிறார்! போராட்ட காலத்திலெல்லாம் பொறித்துக்கொள்ளுங்கள் என் பெயரை பலிபீடத்திற்கு முதல் பலியாக—என்று நெஞ்சுயர்த்தி நின்றவர்!

"நவசீன அரசியல் பூங்காவில் புது வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கட்டும்; மணமுள்ள பரிமள கந்தம் வீசட்டும்!"

—என்று, இருகை கூப்பி இளைஞர் படையை 'வருக, வருக' என வரவேற்றார் மா-சே-துங்!

ஆனால் இவரோ உருவத்தால் வாலிபரல்ல; உள்ளத்தால் எள்ளத்தனையும் துடிப்பு குறையாத செயல் வீரர்!

65 வயதான மா-சே-துங் விலகி, 61 வயதான லியூ-ஷோ-சிக்கு வழிவிடுகிறார்; தன் இடத்திலே—தன் வாரிசாக அமர்த்துகிறார் என்றால், புதியவர் அவருக்குப் புதிரானவரல்ல; நாடு காக்கும் தலைவர்களாய் நாளை மாறப்போகிறோம் என்பதறியாது ஏடு தூக்கிப் பள்ளி சென்ற பருவம் முதல் இருவரும் ஒன்றாக இருந்தவர்கள்; அடுத்தடுத்த கிராமங்களிலே பிறந்தார்கள்; ஒரே பள்ளியில்தான் பயின்றார்கள்! அவரது 61 வருட கால அரசியல் வாழ்க்கையிலே குருதிக் குளத்திலே நடைபோட்ட நிகழ்ச்சிகளை — தோள் கொடுத்த தோழர்களைப் பிணமாக்கிப் போட்ட பெரும் படையைக் கண்ட நேரத்தில் துவளாத தன்மையை — உணர்ந்திருக்கிறது, அந்த நாடு!

சீனாவின் முதல் மனிதர் மா—சே—துங் என்றால்; 'இரண்டாவது மனிதர் லியூ—ஷோ—சி' என்று உலக விமர்சகர்கள் இன்று பாராட்டுகிறார்கள். அந்தப் பாராட்டுரை, அவரது கடந்த கால வாழ்வில், செஞ்சீனத்தை உருவாக்குவதற்காக அவர் தாங்கிய தியாக முத்திரைகளின் பிரதிபலிப்பாகும்!

ஏகாதிபத்திய வெறி கொண்ட லைந்த சியாங்—கே—ஷேக்கை எதிர்த்துப் போராடிய பெரும் படையின் 'மூளை'யே இவர்தான் என்கிறார்கள்; போர்த் திட்டங்கள் வகுப்பதில் பேர்போன இந்தத் தலைவன், நல்லதொரு குடும்பத்தின் தலைவனாக இருந்த நாட்களை விரல்விட்டு எண்ணிவிடலாமாம்!

1927-ம் ஆண்டு...ஷாங்காய் போர் முனையில் கோர யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. வெங்கொடுமைச் சிறைக் கதவுகள் வாயைப் பிளந்துகொண்டு காத்து நிற்கின்றன! ஆனால் ஆதிக்கக்காரர்களின் இலக்கிலிருந்து—கழுகுக் கண்களிலிருந்து தப்பி வாழ்ந்துகொண்டிருந்தார் அவர், மர்ம மனிதனாக!

காடு மலைகளில் திரிந்தார்; இலை தழைகளைத் தின்றார்; விலங்குகளோடு விலங்காக உறங்கினார்! ஓராண்டல்ல; இரண்டாண்டல்ல; பல ஆண்டுகள் பரிதாபகரமான வாழ்க்கையில் ஈடுபட்டிருந்த போதுதான், அவரது நாட்டுப்பற்றை நிரூபிக்கும் நல்லதொரு நிகழ்ச்சி ஏற்பட்டது.

அவர் தங்கியிருந்த ரகசியக் கூடாரத்திலே அவரது மனைவி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டுவிட்டாள்! காட்டு வாழ்க்கையை அவள் விரும்பவில்லையோ; அல்லது பீரங்கிக் குழாயின் வாயிலிலேயே தன் நாடோடிக் குடும்பம் வாழ்க்கை நடத்துவதை வெறுத்தாளோ தெரியவில்லை; எதையும் தாங்கும் இதயமற்ற அந்தப் பெண்ணுள்ளம் தற்கொலையில் ஈடுபட்டுவிட்டது!

உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது; ஓடிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு கணமும் அவள் உயிரைத் தின்று கொண்டிருக்கிறது; சுடுகாட்டுத் தூரத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறது!

உடனடியான மருத்துவ உதவியிருந்தால் அவள் மீண்டும் புத்துயிர் பெற்றுவிடவும் கூடும். என்ன செய்தார் அவர்? நள்ளிரவில் வாடகை 'ரிக்ஷா' ஒன்றை அமர்த்தி அவளை மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். ஆனால்... அந்தோ பரிதாபம்! காலதாமதம் அந்தக் காரிகையின் உயிரைப் பறித்து விட்டது! உலகத்தோடு ஒட்டி வாழ முடியவில்லையே என்று மரணத்தைத் தேடிய அவள் முயற்சி, அவளை இந்த உலகத்தை விட்டே துரத்தி விட்டது!

வாடகை ரிக்ஷாவுக்குப் பதிலாக; ஒரு 'டாக்சி'யை அமர்த்திக் கொண்டிருந்தால், போகத் துடித்த அவளது உயிரைப் பிடித்து நிறுத்தியிருக்க முடியும் என்றனர் மற்றவர்கள், அவரது செயலுக்குக் கண்டனமும் தெரிவித்தார்கள்.

ஆனால், தன் சகாக்களின் எதிர்ப்புக்கெல்லாம் அவர் தந்த ஒரே பதில்....

"வாடகை கார்கள் அனைத்துமே புரட்சிக்காரர்களைப் பிடிக்கும் பணியில் தள்ளப் பட்டிருக்கின்றன! காரோட்டிகளில் பெரும் பான்மையானவர்கள் போலீசார்! ஆகவே டாக்சி ஒன்றை அழைப்பதின் மூலம் அவருகளின் கவனத்தைக் கவருவதையோ—அதனால் புரட்சிக்காரர்களின் மறைவிடத்தை என்னையும் அறியாது காட்டிக் கொடுக்கவோ நான் காரணமாக இருக்க முடியுமா?"

இல்லக் கிழத்தியை இழக்கத் துணிந்தார்; தன் இயக்கத்தின் நடவடிக்கைகள் வெளிப்பட்டு விடக் கூடாதே என்பதற்காக!

—இத்தகைய புயல்கள் அவரது வாழ்க்கையிலே ஏராளம் வீசியிருக்கின்றன! அத்தனைக்கும் அசையாத நெடுமரமாய் வளர்ந்தார்! இன்று சாயாத புகழோடு சீனத்தின் தலைவராகி விட்டார்!

அந்த உழைப்பாளியின் நுழைவால், நல்வாழ்வு பெற்றிருக்கிற சீனக் குடியரசினர் குவலயத்தின் பார்வைக்கு மேலும் இலக்காவார்கள் என்பது உறுதியாம்!

—சொர்ணம்

அம்மையார் மறைந்தார்

டாக்டர் தருமாம்பாள்

20—5—59 அன்று பிற்பகல் 2 மணிக்கு சோகம் தரும் செய்தி ஒன்று கிடைத்தது. தமிழ்ச் சமுதாயம் தாழ்வுற்ற நிலை கண்டு அதன் தரம் உயர்த்தப் பாடுபட்ட அன்னையர் குலத்தில் ஒருவரான டாக்டர் தருமாம்பாள் அம்மையார் அவர்கள் இயற்கை எய்தினர்கள் என்ற செய்தியே அது!

சிறிது காலமாக உடல் நலிவுற்று படுக்கையிலேயிருந்துவந்த அம் மூதாட்டியாரின் திடீர் மறைவு குறித்துத் திடுக்கிடத்தான் செய்தோம். அவர்கள் ஆற்றிய அரும் பெரும் பணிகள் நெஞ்சை விட்டகலாதவையன்றோ?

1938-ம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரும் பங்கு கொண்டு போராடியிருக்கிறார்கள்; அதன் காரணமாய் ஆறுமாத காலம் வெங்கொடுமைச் சிறையில் தள்ளப்பட்டார்கள்.

மீண்டும் 1948-ம் ஆண்டு நடைபெற்ற பள்ளி மதியல் போராட்டத்தின்போதும் கைது செய்யப்பட்டு ஒன்றரை நாட்கள் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்.

நீதிக் கட்சியில் பெரும் ஈடுபாடு கொண்டும் பணி புரிந்திருக்கிறார்கள்.

சித்த மருத்துவத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்ற அம்மையார், ஏழை எளியவர்களுக்கு இலவசமாக சிகிச்சை செய்திருக்கிறார்கள்!

சென்னை, மாணவர் மன்றத்தின் தலைவராகவும், மகளிர் மன்றத்தின் காப்பாளராகவும் இருந்து அவர் ஆற்றிய பணி போற்றுதற்குரியதாகும்!

69—வயது நிரம்பிய அம்மையாரின் மறைவு தமிழகத்திற்கு மாபெரும் இழப்பாகும்! அவர்களது பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ரோமாபுரிப் பாண்டியன்

மு. கருணாநிதி

1 காவலரும்; நாவலரும்!

கி. மு. 20—ம் ஆண்டின் துவக்கத்தில் ஒரு நாள்—சோழப் பெருமன்னன் கரிகாலன் திருநகரம் பூம்புகார்ப் பட்டினம் புதிய பொலிவு பெற்றுத் திகழ்ந்தது. மருவூர்ப்பாக்கத்தில் கடற்கரையையொட்டி அமைந்திருந்த வான்முட்டும் மாடமாளிகைகளில் எல்லாம் சோழனது கொடியும் பாண்டியனது கொடியும் ஒன்றையொன்று தழுவிக் கொண்டு பறந்தன. யவனப் பெருமக்களின் மாளிகைகளில் எழில் நிறைந்த தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. "வாழ்க; சோழ பாண்டியர் உறவு!" என்ற எழுத்துக்களை முத்துக்களால் பதித்த கம்பீரமான நுழைவு வாயில்கள் பட்டனப் பாக்கமெங்கும் காட்சி தந்து கொண்டிருந்தன. மருவூர்ப் பாக்கத்தில் வாழும் வணிகர், பட்டாடை, பருத்தியாடை, கம்பள ஆடை நெய்வோர், பொற்கொல்லர், பூகட்டுவோர், ஓவியர், சிற்பிகள், மாலுமிகள், அனைவரும் புத்தாடை புனைந்து அரச வீதி நோக்கி விரைந்தனர். நிலக்கிழவர், மருத்துவர், மறையவர், அரண்மனை அலுவலாளர், பாணர் இசைவாணர், புலவர் பெரு மக்கள் அனைவரும். தாம் வாழுகின்ற பட்டினப்பாக்கத்தையே விழாக் கோலம் பூணச்செய்து தங்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறு அரசவீதியை இமைகொட்டாது ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். உலகமே வறுமைக் காடாக மாறிவிட்டாலும் பூம்புகார் வறுமைக் கோலம் கொள்ளாது என்று முழங்கிக் கொண்டிருந்த புகார் துறைமுகப் பட்டினத்தின் கலங்கரை விளக்கத்தின் உச்சியிலே புலிக்கொடியும் மீனக் கொடியும் சேர்ந்து பறந்த பெருமைக்குரிய காட்சியை தலைநகரத்து மாந்தர் அனைவரும் கண்டு பூரிப்பு கொண்டனர். கரிகால் பெருவளத்தானுக்கு மகத நாட்டு மன்னன் வழங்கிய பட்டிமண்டபம் ஒளி மயமாக விளங்கிற்று. வச்சிர நாட்டான் அளித்த கொற்றப் பந்தர், அழகின் சிகரமாக அமைந்திருந்தது. அவந்தி நாட்டு மன்னன் தந்த 'தோரண வாயில்' "மதுரைக் கொற்றவனே! வருக! வாழ்க!!" என்று முழங்கிக் கொண்டிருந்தது.

எழில்சேர் மங்கையர் யானைகளின் மீதமர்ந்து முன் செல்ல பூம்புகார்ப் பட்டினம் அதுவரை காணாத மாபெரும் பவனியொன்று அந்த மாநகரில் நடைபெற்றது. தானைத் தலைவர்களும் நாற்படை வீரர்களும் அணி வகுத்து வர—இரு யானைகளின் மீது மாமன்னர் இருவர் அமர்ந்திருக்க—அன்று நடைபெற்ற அந்த பவனி கண்டு தமிழ்த் தரணியே வியப்பு மேலீட்டால் விழித்து நின்றது.

ஒரு யானையின்மீது சோழப் பேரரசன் கரிகாலன் வீற்றிருந்தான். அதனையொட்டி மெல்ல நடைபோட்டு வரும் மற்றொரு யானையின்மீது பாண்டிய நாட்டு வேந்தன் பெருவழுதி அமர்ந்திருந்தான்.

"வாழ்க கரிகால் மன்னர்!"

"வாழ்க பெருவழுதிப் பாண்டியர்!"

"வளர்க சோழ பாண்டியர் உறவு!"

—என்ற முழக்கம்விண்ணதிரக் கிளம்பிற்று.

காவிரியாற்று நீரையள்ளித் தெளித்து விளையாடியவாறு பூம்புகாரின் வாலிபரும் மாதரும் விழாக் கொண்டாடினர். தெருவெங்கும் மலர்களைத் தூவினர். "தேன் தமிழ் வெல்க!" என்று கூவினர். எங்கு திரும்பினும் விழாக் காட்சி! இசை முழக்கம்! அகமுழவு புறமுழவு எனத்தக்க முழவுகள் எல்லாம் ஒலித்தன. இடக்கை, உடுக்கை, பேரிகை. படகம் எனப்படும் தோற் கருவிகள் அனைத்தும் ஆர்த்தெழுந்தன. குழல், வங்கியம் எனும் துளைக்கருவிகளும், சகோட யாழ், பேரியாழ், மகரயாழ் போன்ற நரம்புக் கருவிகளும், பவனியினூடே உற்சாகத்தை வாரியிறைத்துக் கொண்டிருந்தன. மக்களின் வாழ்த்துக்களைப் புன்னகையோடு ஏற்றுக் கொண்டு ஒருவரைப் பார்த்து ஒருவர் முறுவல் செய்தவாறு கரிகாலனும், பெருவழுதியும் யானை மீது கம்பீரமாக அமர்ந்திருந்தனர்.

அரசவீதிகளைக் கடந்து அணி தேர்ப்புரவி ஆட்பெரும் படையுடன் அழகுற நடந்த அந்த பவனியின் சிறப்பை எண்ணி எண்ணி மகிழ்ந்தனர், சோழ நாட்டுத்தானைத் தலைவர்கள்.

சோழப் பெருங்குடி மக்கள் பாண்டியன் பெருவழுதியின் தோற்றங் கண்டு அவனுக்குத் தாங்கள் மரியாதை செலுத்தக் கடமைப்பட்டவர்களே என்டதை உணர்ந்தனர். எடுப்பான உடற்கட்டும் மிடுக்கான விழி நோக்கும் பெற்று, அகன்ற மார்பில் கொற்கை முத்துக்களால் கோத்த ஆரங்களை அணிந்து, மணி முடியின் மதிப்பைக் காப்பாற்றும் பெருமை வாய்ந்த வேந்தனே தான் என்று சோழர் குடியினர் எண்ணிப் புகழ்ந்திடுமளவுக்கு பவனி வந்தான் பெருவழுதி.

"இமயத்தை முட்டிக் கலக்கிய தோள்களன்றோ அவைகள்! எதிர்த்து வந்த மன்னுதி மன்னர்களை யெல்லாம் தூளாக்கிய வேலன்றோ கையில் பிடித்திருப்பது! நாடு காக்கும் மறக் குலத் தன்மையன்றோ முகத்தில் ஒளி விடுவது! இவரைத் தலைவனாகப் பெற்ற நாமன்றோ பெரும் பேறு பெற்றவர்கள்!" எனக் கரிகால் மன்னவனைப் பவனியிலே கண்ட அனைவரும் பாராட்டி மகிழ்ந்தனர்.

முதியவர் வாழ்த்தினர். இளையவர் எங்கள் நாடு வாழ்க என அதிர்ந்தனர். அரசவீதிகளில் அழகேற்றியவாறு அந்த மன்னர்களின் ஊர்வலம் நகர்ந்தது, மெல்ல மெல்ல!

இரு பெரும் வேந்தர்களையும் நோக்கியதலைநகரத்து மாந்தரது விழிகள், பாண்டிய மன்னனையொட்டி வெள்ளைப்புரவியொன்றில் அமர்ந்து வெற்றிப் புன்னகை காட்டியவாறு ஊர்வலத்தில் சென்ற பாண்டிய நாட்டு வீரன் ஒருவனைக் காணத் தவறவில்லை. அவன் குதிரையில் வீற்றிருந்த அழகே தனியாக இருந்தது. கடிவாளத்தைக் கரத்திலேந்தியிருந்த பாவனையே எல்லாருடைய உள்ளத்தையும் கவர்ந்தது. சிறிய இளம் முறுக்கு மீசைகள்; சுருண்டு காய்த்த மிளகாய்கள் போல சுருள்சுருளான தலைமுடி! ஒவ்வொரு அசைவிலும் வீரந் துள்ளுவதுபோன்ற காட்சி! புன்னகையிலே ஒரு தனிக் கவர்ச்சி! யானைமீது வரும் அரசர்களையும் புரவிமீது வரும் அந்த வாலிபனையும் மாறி மாறிப் பார்த்தவாறு மக்கட் பெருங்கடல் உற்சாகத்தோடு நகர்ந்து கொண்டிருந்தது.

பட்டினப் பாக்கத்திலுள்ள புலவர் தெருக்களை அணுகியது ஊர்வலம். தமிழ் வளர்க்கும் காவலர்கள் அரசர்கட்கு மாலை அணிவித்து மகிழ்ந்தனர். அரசன் கரிகாலன் ஆவலோடு புலவர் கூட்டத்தை நோக்கினான்.

அவனது வாள் போன்ற கண்கள் அந்தக் குழுவில் யாரையோ மிக அக்கறையோடு தேடுகின்றன என்பதைத் தமிழ்ச் சான்றோர் புரிந்து கொண்டு, "என்ன மன்னவா?" எனக் கேட்டனர்.

கரிகாலன் கேட்டான், "காரிக் கண்ணனார் எங்கே?" என்று!

"அவர், தனது இல்லத்து வாயிலில் காத்து நிற்கிறார்!" என்று பதில் மொழிந்தனர் புலவர்கள்.

காரிக்கண்ணனார், தனது வீட்டு வாயிற்புறத்தில் நின்று கொண்டிருந்தார். அவரது அ மகிழ்ச்சி முகத்தால் பீறிட்டெழுவது கண்டு கரிகாலன் நன்றியுடன் அவரைப் பார்த்தான். புலவரின் கண்கள் குளமாகிவிட்டன. அந்த ஆனந்தக் கண்ணீரில் ஒத்தியெடுக்கப்பட்ட இரு மலர்களை சோழனுக்கும் பாண்டியனுக்கும் அளித்தார். மன்னர்கள் அதனைப் பெற்றுத் தம் மணி முடியில் வைத்துக் கொண்டனர். எல்லாப் புலவரிடத்தும் காட்டுகிற அன்பையும் மரியாதையையும் விட காரிக்கண்ணனாரிடத்திலே கரிகாலன் அதிக அளவு அன்பும் மரியாதையும் காட்டுவதைப் பாண்டியன் உணர்ந்து, தன் கழுத்திலேயிருந்த முத்தாரம் ஒன்றினைக் கழற்றிப் புலவருக்கு அணிவித்து மகிழ்ந்தான்.

"புலவரே! அரண்மனை சேர்ந்ததும் ஆள் அனுப்புகிறேன். வந்து எம்மைத் தமிழால் வாழ்த்துவீராக!" என்று கேட்டுக் கொண்டான், சோழ நாட்டு வேந்தர் பெருந்தகை!

"வருகிறேன் அரசே! வாழ்க!!" எனக்கூறி வணக்கம் தெரிவித்தார் புலவர்.

அப்போது. . யானைமீதிருந்த பாண்டியன் பெருவழுதியின் கண்கள், காரிக்கண்ணனார் வீட்டுக்குள்ளே பாய்ந்தன. அதே சமயம், பாண்டியனுக்கு அருகாமையில் புரவியில் அமர்ந்திருந்த வாலிப வீரனின் கண்களும் வீட்டுப் புறமாகத் தாவிச் சென்றன. புலவர் வீட்டு வாயிற் கதவின் ஓரமாக ஒளிந்து நின்றவாறு முழு

நிலா முகத்தை மட்டும் வெளியே நீட்டிக் கொண்டிருந்தாள், ஒரு வடிவழகி. தன்னைப்பிறர் பார்த்து விட்டனர் என்பதை உணர்ந்தது தான் தாமதம்; உடனே உள்ளே தன்னையிழுத்துக் கொண்டாள். பாண்டிய மன்னன் பார்வை அந்தக் கதவோரத்தைவிட்டு மீள்வதற்குச் சற்றுத் தயங்கிற்று. கரிகாலனோ மற்றவர்களோ தன்னைப் பார்க்கிருர்களோ என்ற பயத்தோடு சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான், பெருவழுதி. "சே! என்ன இது!" என்று தன்னைத் தானே இடித்துரைத்துக்கொண்டான். புரவியிலிருந்த வாலிபன், காரிக்கண்ணனுரையும் அவரது வீட்டையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுப் பவனியிலே தன்னை ஐக்கியப்படுத்திக்கொண்டான்.

எழுந்த நிலவு அறுந்து வீழ்ந்ததுபோல் மறைந்து விட்டது அந்தச் சுந்தரமுகம்! பவனியின் சிறப்பைக் கண்டு களித்தவாறு அது அந்தத் தெருவை விட்டு அகலும் வரையில் அங்கேயே நின்று கொண்டிருந்துவிட்டுக் கடைசியாகத் தன் வீட்டிக்குள் நுழைந்தார், காரிக்கண்ணனுர்.

நுழைந்தவர், "முத்து நகை! முத்து நகை!!" என்று அன்பைக் குழைத்த பெயரை உச்சரித்து அழைத்தார்.

"அப்பா! என்ன வேண்டும்?' என்றவாறு அவள் ஒடி வந்தாள்.

ஆமாம்; அவள்தான்! பவனி சென்ற மன்னர்களை ஒளிந்திருந்து நோக்கிய அந்தப் பருவக் கிள்ளைதான்!

அவளைக் கண்டதும் புலவர், "பார்த்தாயா முத்துநகை! உனக்கோர் முத்துநகை!" என்று தன் கழுத்திலே பாண்டியன் அணிவித்த முத்தாரத்தை யெடுத்து அவள் கரத்திலே தந்தார். அவள் அதை ஆசையுடன் வாங்கிக் கொண்டாள்.

"பாண்டியநாட்டு முத்துக்கள் என்ருலே அவைகளுக்குத் தனி ஒளிதான்; இல்லையா அப்பா?" என்று கேட்டாள் முத்துநகை.

"ஆம் அம்மா! அதிலென்ன ஐயப்பாடு! கொற்கை முத்துக்களுக்கு ஈடான முத்துக்கள் உலகத்திலே வேறெங்கும் கிடையாது! ஏறத்தாழ பத்து ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து நாட்டை அரசாண்டு பரிதாபகரமாகச் செத்துப் போனளே; கிளியோபாத்துரா என்ற அழகி—அவளுக்கு இந்த முத்துக்கள் இல்லாவிட்டால்கள்ளே அருந்த முடியாதாம். மதுக் கிண்ணங்களில் இந்த முத்துக்கள் எழுப்பும் ஒசை அவளுக்குப் பிடித்தமான சங்கீதமாம்! ரோமாபுரியிலே இருக்கிற மக்களுக்குப் பாண்டிய நாட்டு முத்துக்கள் என்ருல் உயிர்! அவர்களது ஆடை அணிகள் ஒவ்வொன்றிலும் இந்த முத்துக்கள் சுடர்விட்டுக் கொண்டிருக்கிறது!"

"ஏனப்பா! பாண்டிய மன்னருக்கும் சோழ மன்னருக்கும் இன்றைய தினம் நடைபெறுகிற நட்புறவு ஒப்பந்தம் வெற்றிகரமாக ஆகிவிடுமல்லவா?"

"என்ன இப்படிக் கேட்கிருய்? இப்படியொரு உறவு ஏற்பட வேண்டுமென்று மன்னர் கரிகால் திருமாவளவனை இத்தனை நாளும் வற்புறுத்தியதே நான்தான்! எனக்கு நம்பிக்கையிருக்கிறது; சோழர் பாண்டியர் உறவு நீடிக்குமென்று!"

"இந்த உறவை எப்படியும் முறித்துவிட வேண்டுமென்று யாரோ சில சிற்றரசர்கள் முயற்சிப்பதாகக் கூறினீர்களே......"

"அதெல்லாம் இனிமேல் முடியாது! உறுதிப் பட்டுவிட்ட உறவு இது! நமது சோழ மன்னரிடம் தோற்ருேடிப்போன சிற்றரசன் இருங்கோவேள் என்பவன் தான் ஏதாவது குந்தகம் விளைவிக்கக்கூடும். அதற்காக யாரும் பயப்படத்தேவையில்லை!"

இதைக் காரிக்கண்ணனுர், தன மகளிடம் கூறிக்கொண்டிருக்கும்போதே தெருவிலே பெருத்த ஆரவார ஒலி கேட்டது. திடுக்கிட்டார் புலவர்.

முத்துநகை கதவுப்புறம் ஓடினாள். ஓடியவள், "அப்பா! அப்பா! இங்கே வாருங்கள்!" என்று கூவினுள்.

புலவர் தெருப் பக்கம் விரைந்தார். தெருவிலே இரண்டு குதிரை வீரர்கள் ஆவேசமாகப் போரிட்டுக் கொண்டிருந்தனர். குதிரைகள் ஒன்றன் மீதொன்று பாய்ந்து பாய்ந்து சண்டையிட்டன. அவைகளின்மீது அமர்ந்திருந்த வீரர்களோ தங்கள் கைகளில் தாங்கிய ஈட்டிகளைக் கொண்டு யார் உயிரை யார் முதலில் போக்குவதென்ற உணர்ச்சிக் கொந்தளிப்போடு போரிட்டனர். புலவர் அவர்களை உற்றுக் கவனித்தார். ஒருவனை அவரால் அடையாளம் புரிந்துகொள்ள முடிந்தது. பாண்டியன் பெருவழுதியின் பக்கத்தில் குதிரையில் அமர்ந்து பவனியிற் சென்ற பாண்டிய நாட்டு வீரன்தான் அவன்!

மற்ருெருவன் யார்? அவருக்குப் புரியவில்லை. ஆனல் அவனும் பாண்டிய நாட்டு வீரர்களின் உடையிலேதான் இருந்தான்.

இந்தப் போராட்டம் எப்படி முடியுமோ தெரியவில்லையே என்று ஒவ்வொரு கணமும் எதிர் பார்த்தனர் கூடியிருந்தவர்கள். ஒருவன் புலியெனப் பாய்கிருன். மற்றவன் சிங்கமென உறுமுகிருன். இருவர் ஈட்டிகளும் ஒன்றையொன்று அதன் கூர்மையான முனைகளில் தொட்டுத் தாக்குகின்றன என்ருல் குறி பார்த்து எதிரியைக் கொன்று தீர்ப்பதில் அவர்கள் எவ்வளவு வல்லவர்களாய் இருந்திடவேண்டும்! இறுதியில் ஈட்டிமுனைக்குத் தன் மார்பகத்தைக் காட்டி ஒரு மறவன் தெருவில் வீழ்ந்தான்.

வீழ்ந்தவனின் உடையைக் கிழித்துப் பார்த்தான், பெருவழுதியுடன் வந்த வீரன். மேலே அணிந்திருந்ததுதான் பாண்டிய நாட்டு உடை! உள்ளே அவனது உண்மையான உடை இருந்தது. சோழனின் எதிரியான இருங்கோவேள் என்பவனின் தானைத் தலைவன் அவன் என்பது தெரிந்துவிட்டது!

எதிரியின் தானைத் தலைவன் பிணமாக வீழ்ந்து விட்டான். அவனை வீழ்த்திய வீரன், போரிட்ட களைப்பால் மயக்கமுற்றுப் புலவர் வீட்டுப் படிக்கட்டில் சாய்ந்தான்.

புலவர், பரபரப்புடன் அவனை உள்ளே அழைத்துச் சென்று மயக்கம் தெளிவிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டார். அவன் நெஞ்சிலே பலமான காயங்கள் இருந்தன! நெற்றியிலே எதிரியின் ஈட்டி உண்டாக்கிய புண்ணிலேயிருந்து ரத்தங் கசிந்துகொண்டேயிருந்தது! புலவரும், முத்து நகையும் ஓடியாடி அவனுக்குச் சிகிச்சைகள் செய்தனர்.

சிறிது நேரத்திற் கெல்லாம் அவன் மயக்கம் தெளிந்து எழுந்து உட்கார்ந்தான். காயங்களில் வலி பொறுக்க முடியவில்லை. உடம்பை நெளித்து நெளித்துத் துவண்டான், கொதிக்க வைத்த மஞ்சளை ஊமைக்காயங்களில் போட்டாள் முத்துநகை. ஏதேதோ மருந்துகளைத் தேடி யெடுத்து ரத்தங் கசியும் புண்களில் தடவினுர் புலவர் பெருமான்.

"நீ யாரப்பா?"

"நான் பாண்டிய நாட்டுக்காரன்; பெருவழுதி மன்னரின் ஊழியன்!"

"பெயர்?"

"செழியன்!"

"போரில் வீழ்ந்து விட்டவன் யார்?"

"அவன் சோழ மன்னரின் எதிரி—கரிகால் வளவரைக் கொல்லவந்த துரோகி—சிற்றரசன் இருங்கோவேளின் தானைத் தலைவன் வில்லவன்—

"பவனியில் செல்லும் சோழரைப் பின்னிருந்து தாக்கி ஒடி ஒளிந்து கொள்ளவந்தகோழை! அவன் ஈட்டியை கரிகால் மன்னர்மீது எறிய முனையும்போது நான் பார்த்துவிட்டேன். ஊர்வலத்திலிருந்து மெதுவாக நழுவி அவனைத் தொடர்ந்தேன். அவன் என்னைப் புரிந்துகொண்டு ஓடத் தொடங்கினன். துரத்தி வந்து இங்கே வளைத்துக் கொண்டேன். தொலைந்தான் துரோகி!" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டான் செழியன்.

"நல்ல வேளை—எங்கள் மன்னர் தப்பினுர். வீரனே! உன்னைக் காவிரி அன்னை வாழ்த்துவாளாக! தமிழ்த் தாயின் வீர மகனே! உன் ஆற்றலைக் கண்டு நான் வியக்கிறேன். வேங்கையென பாய்ந்து நீ வெற்றி விளைவித்த நிகழ்ச்சியை நான் சாகும்வரை மறக்கமாட்டேன். புகார்ப் பட்டினத்து மக்கள் உனக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கின்றனர். எம் மன்னரைக் காத்த உனக்கு மன்னர் திருமுன்னிலையில் தகுந்த பரிசு வழங்க இப்போதே போய் ஏற்பாடு செய்கிறேன்!" என்று துள்ளிக் குதித்தார், தமிழை அள்ளி வழங்கும் புலவர் பெருந்தகை.

"வேண்டாம் புலவரே! வேண்டாம்! இப்படியொரு நிகழ்ச்சி யேற்பட்டதே இரு மன்னர்களுக்கும் தெரிய வேண்டாம். நட்புறவு விழா கொண்டாடும் நேரத்தில் அதைக் குலைக்கும் முயற்சிகள் நடைபெற்றதாகச் செய்திகள் வருவது அவ்வளவு நல்லதல்ல! தயவு செய்து இந்தச் செய்தி நம்மோடு அழிந்து போகட்டும். யாரோ இரு வீரர்கள் போரிட்டனர். ஒருவன் செத்தான்; ஒருவன் பிழைத்தான்—என்ற அளவோடு இது நிற்கட்டும்!" என்று கேட்டுக் கொண்டான் செழியன்.

அப்போது வாயிற்புறத்திலேயிருந்து யாரோ அழைத்தார்கள், "புலவர் பெருமானே! புலவர் பெருமானே!" என்று!

புலவர் தெருப் பக்கம் சென்ருர். அரண்மனை வீரர் இருவர் புலவரை வணங்கி நின்றனர்.

"தங்களை அழைத்து வருமாறு மன்னர் ஆணையிட்டிருக்கிருர்!" என்று கூறினர் வீரர்கள். கூறியவர்கள், "தெருவிலே ஒரு பிணம் கிடக்கிறதே; என்ன நடந்தது?" என்றும் பதைப்போடு கேட்டார்கள்.

"ஆமாம்; யாரோ இரு பாண்டிய நாட்டு வீரர்கள் ஒருவரையொருவர் ஈட்டி கொண்டு தாக்கிப் போரிட்டனர். ஒருவன் வீழ்ந்தான்; அவ்வளவுதான். நான் அரசரிடம் போகிறேன். நீங்கள் இந்தப் பிணத்தை அகற்ற ஏற்பாடு செய்யுங்கள்!" எனக் கூறியவாறு புலவர் உள்ளே வந்து, செழியனிடம் செய்தியைச் சொன்னுர். செழியனும் விடை பெற்றுக்கொண்டு எழுந்தான். ஆனல் அவனல் எழ முடியவில்லை.

புலவர் அவனைப் பிடித்து உட்கார வைத்து, "நீ இங்கேயே இரு! முத்துநகை உன்னைக் கவனித்துக் கொள்வாள். நான் அரண்மனைக்குப் போய் உடனேயே திரும்பி விடுகிறேன்!" என்று புறப்பட்டார் புலவர்.

செழியனல் அதைத் தடுத்துப் பேச இயலவில்லை. காரணம்; அவரோ பெரும் புலவர்! வலியோ தாங்கமுடியாமல் இருக்கிறது! சரியென்று உட்கார்ந்து கொண்டான்.

"முத்துநகை! பத்திரமாக கவனித்துக் கொள்ளம்மா!" எனக்

[தொடர்ச்சி பக்கம்—12]

இன்பம்

இந்தக் கலேப்பிலே...

★

வித்தகர்கள் எழுதி வைத்த சத்தான கருத்துரைகள்

"முத்தாரம்"

இதழ் 27-ல் இடம்பெறுகின்றன!

நூலேணி

[நூலேணிக்குப் புத்தகங்கள் அனுப்புபவர்கள் இரண்டு படிகள் அனுப்ப வேண்டுகிறோம்.]

தையற்கலை

ஆசிரியர்: கே. பி. சுந்தரம்

★ அறிஞர் அண்ணாவினுடைய வாழ்த்துடன் வெளியிடப்பட்டிருக்கும் இப் பத்திரிகை, பொது மக்கட்கும் தையற் கலையில் ஈடுபட்டுள்ளோருக்கும் பயனளிக்கும் முறையில் அமைந்திருக்கிறது. முயற்சி புதிதெனினும், வெற்றியின் அறிகுறி தென்படுகிறது. குடும்பப் பெண்கள் தையற் கலையைக் கற்றுக் கொண்டுவரும் இந்நாளில் இப்படி ஒரு பத்திரிகை, சுவைதரும் படங்களுடன் வெளி வருதல் மிக இன்றியமையாததுதான்!

[முகவரி: 132, புரசை நெடுஞ்சாலை, சென்னை—7. பக்கங்கள் 16. விலை: தனி இதழ் 20 காசு.]

காதல் விழி

அழகரசன்

★ மிடுக்கு நிறைந்த மன்னர் மன்னன் மதுவைக் குடித்து விட்டுப் பிறப்பிக்கும் கட்டளைகளைப்போல் தயவு தாட்சண்யமின்றி, எதைப்பற்றியும் ஏளனக் குரலோடு பாடுவது ஒரு வகை. அந்த அடிச்சுவட்டைப் பற்றி எழுந்த கவிதை நூல்தான் காதல்விழி!

"வந்த தென்றல் தன்னைத் தழுவு! போ!....", "ஓ! ஓ! ஓ!", "பேச்சும் ஏன்? சும்மா ஆடு!", "நிலவே! நில்! நில்! ஓடாதே!"—என்பவை அதற்கான சான்றுகள். கவிதை முழுவதும் இதே 'பாணி'யில் போவது அலுப்பைத் தருகிறது! 'காதல் விழி' ஒரு 'நீண்ட' காவியம்!

'பாரதிதாசன் பரம்பரை'—என்று ஆசிரியர் தம்மைக் கூறி கொண்டாலும், அந்தப் பரம்பரைக்கே உரிய சமுதாய—விடுதலை இயக்கக் கருத்துக்களை நூலில் காணோம்.

பிழைகள் அதிகமிருந்தாலும் கவிதை மணம் ஆசிரியருக்கு இருக்கும் காரணத்தால் இந் நூல் சிற்சில இடங்களில் இனிக்கிறது.

[கிடைக்குமிடம்: பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. பக்கங்கள் 104. விலை ரூ. 1—50]

நமது ரேடியோ

எம். கான் முகமது பி. ஏ.

★ 'வீட்டுக்கு வீடு வானொலி'—என்கிற அளவுக்குப் பரவி வருகிற வானொலிப் பெட்டியின் பயனை விரிவுபடுத்தும் முறையிலும், அதைப் பயிலுகின்றவர்களுக்கு நல்ல தமிழில் வானொலி பற்றித் தெளிவாக எடுத்துக் கூறுவதிலும் துணிந்து முன் வந்திருக்கிறது, இந்தச் சிறு நூல்.

அறிவியல்மேதை ஜி. டி. நாயுடு தந்திருக்கிற முன்னுரைப்படி ஒவ்வொருவரும் அவசியமாகப் படிக்க வேண்டிய கருத்துக் கருவூலமாகும், இந்நூல்.

[கிடைக்குமிடம்: கான் ரேடியோஸ், காண்டி பில்டிங்ஸ், அவினாசி ரோடு, கோவை. பக்கங்கள் 102. விலை ரூ. 2-25]

நாட்டு விடுதலை கேட்டனர்!
உரிமை முழங்கி நின்றனர்!
மறக்குலப் பெருமை பாடினர்!

இதற்குத்தான்

கொடுஞ்சிறை! கோரநர்த்தனம்!
என்றாலும்,
"எழுந்தது உணர்ச்சி என்று இளம்பரிதி கிளம்பட்டும்! நம்நாடு தழைக்கட்டும்! முரசொலிக்கட்டும்! மன்றத்திலே எங்கள் மக்கள் வெள்ளம் கூடட்டும்! தவழட்டும் தென்றல், தவழட்டும்! வாழட்டும் தென்னகம், வாழட்டும்!"
என்று முழங்கிச்
சாவு கண்டோரின் சரிதை சொல்லும்

கண்ணதாசன் புரடக்ஷன்ஸ்

"சிவகெங்கைச் சீமை"

தென்னகமெங்கும் திரையிடப்படுகிறது, மே 22 முதல்!
சென்னை ஸ்ரீ கிருஷ்ணா, பாரகன், உமாவில் மே 19 முதல்!

இயல் இசை கூத்து

சிவகெங்கைச் சீமை

விடுதலைப் போராட்ட காலத்தில், வெள்ளையரை எதிர்த்துப் போர் முழக்கமிட்ட குறுநில மன்னர்களாம் மருது பாண்டியர்களை வைத்துப் பின்னப்பட்ட இத்திரைப்படம் 22—5—59 முதல் தென்னகமெங்கும் பவனி புறப்படுகிறது.

பாஞ்சாலங் குறிச்சியிலிருந்து தப்பியோடுகின்ற ஊமைத் துரை சிவகெங்கைச் சீமையில் அடைக்கலம் அடைகிறான்.

நண்பரை ஆதரிக்கிறார்கள், மருது சகோதரர்கள். ஆனால் பகைவனுக்கு இடம் கொடுத்தனர், என்ற காரணத்தால் பகைவனாகிறான், கும்பினியாரின் அதிகாரம் பெற்ற வேல்ஸ்துரை! விடுதலைப் பெரும்படையும் வெள்ளையனின் பட்டாளமும் களத்திலே சந்திக்கின்றன.

இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின் கோவையாக உருவாகியிருக்கும் இப்படத்தை கண்ணதாசன் புரொடக்ஷன்சார் தயாரித்திருக்கிறார்கள். கவிஞர் கண்ணதாசன் கதை, வசனம், பாடல்கள் அமைத்துள்ளார். இப்படத்தை கே. சங்கர் டைரக்ட் செய்திருக்கிறார். விசுவநாதன் — இராமமூர்த்தி இசையமைத்திருக்கிறார்கள்.

இலட்சிய நடிகர் ராசேந்திரன், டி. கே. பகவதி, முஸ்தபா, பி. எஸ். வீரப்பா, குமாரி கமலா, எம். என். ராஜம், எஸ். வரலட்சுமி, தாம்பரம் லலிதா, நடிக மணி டி. வி. நாராயணசாமி ஆகியோர் நடித்திருக்கின்றனர்.

மன்னாதி மன்னன்

நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸார் தயாரித்துவரும் திரைப்படத்திற்கு இப்பொழுது "மன்னாதிமன்னன்" என்று பெயரிட்டிருக்கிறார்கள். கவிஞர் கண்ணதாசன் கதை வசனம் எழுதும் இப்படத்தில் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர்., அஞ்சலி தேவி, பத்மினி, ராகினி ஆகியோர் நடித்து வருகின்றனர். தயாரிப்பாளரான நடேசனே படத்தை டைரக்ட் செய்யப்போவதாக நம்பத்தகுந்த செய்தியொன்று கூறுகிறது!

'சிவகாமி'யின் அடுத்த படம்!

'புதுமைப்பித்த'னைத் தயாரித்த சிவகாமி பிக்சர்சார் அடுத்த படத்திற்கான வேலைகளில் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர். இத்திரைப் படத்திற்கான கதை, வசனத்தை தோழர் மாறன் எழுதுகிறார். சந்திரபாபு பிரதம பாகமேற்று நடிக்கும் இப்படத்தில், பாலையா, வி. ஆர். ராஜகோபால், ஜமுனா—ஆகியோரும் நடிக்கின்றனர்.

மாவீரன் செம்புலி

ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போர்முழக்கம் செய்த மற்றொரு வீரனும் செம்புலிங்கத்தின் கதையைத்திரைப்படமாக்கப் போகிறார்கள், நாடார் பிலிம் சார்.

'மாவீரன் செம்புலி'— என்ற தலைப்புக் கொண்ட இத்திரைப் படத்தில் எம்.ஆர். ராதா, பி.எஸ். வீரப்பா, எம். என். ராஜம், எம். வி. ராஜம்மா ஆகியோர் நடிக்கின்றனர்.

மீண்டும் ஒரு முழு நீளக் கலர்ப்படம்

தமிழகத் திரையுலகின் துணிகர முயற்சிகளில் இப்போது முழு நீள கலர்ப் படம் தயாரிப்பதும் ஒன்றாக இருக்கிறது. சிற்சில காட்சிகளை மட்டுமே கலரில் பார்த்து மகிழ்ந்த ரசிகர்கள், மார்டன் தியேட்டர்சாரின் 'அலிபாபா' படத்தை முழுதும் கலரில் கண்டார்கள். அடுத்தபடியாக புரட்சிநடிகரின் புரட்சிப் படமான 'நாடோடி மன்ன'னின் பாதிப் பகுதி கலரில் வெளிவந்தது. இப்போது பத்மினி பிக்சர்சார் 'கட்டபொம்மனை' மீண்டுமொரு முழு நீளக் கலர்ப்படமாக வெளியிட்டு வெற்றி கண்டிருக்கிறார்கள்! அடுத்தபடியாக தற்போது 'வாகினி' அதிபரான நாகிரெட்டியார், தான் முழு நீளக்கலர்ப்படம் ஒன்றைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கிறார். மிகப் பெரிய திட்டத்தில், அதிகப் பொருட்செலவில், பிரம்மாண்டமான தயாரிப்பாக அப்படம் இருக்குமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதை டி. பிரகாஷ்ராவ் டைரக்ட் செய்வார் என்பது இதுவரை கிடைத்திருக்கிற செய்தி!

'சைப்ரஸ்' சரித்திரம்

கற்பனை கதைகளைவிட வரலாற்று நிகழ்ச்சிகளையே படமாக்குவதில் சுவையிருப்பதாக ஹாலிவுட் படத் தயாரிப்பாளர்கள் இப்போது நம்புகிறார்களாம்! உலகத்தின் கண்ணோட்டத்தைக் கவர்ந்த விடுதலைப் போராட்டம் ஒன்றைப்படமாக்க அமெரிக்கத் தயாரிப்பாளர் முன் வந்திருக்கிறார். அதனால், ஆதிக்கபுரிக்கு எதிராக சைப்ரஸ் மக்கள் நடத்திய கிளர்ச்சியையும், முடிவிலே மகத்தான வெற்றிபெற்ற வரலாற்றையும் 'சைப்ரசின் சரித்திரம்' என்ற பெயரில் படமாக்குவதற்கான வேலைகளை ஆரம்பிக்க இருக்கிறார்கள்.

திரைப்பட இசைக்குழு

திரைப்பட இசைக்குழு என்ற அமைப்பின் தலைவராக சங்கீத டைரக்டர் கோவிந்தராஜுலு(நாயுடு) தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

சங்கப் பொதுக் கூட்டம் தியாகராயநகர், கிருஷ்ணசாமி சபாவில் கூடியது. திரைப்பட இசை வல்லுனர்கள் எல்லோரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பின்னர் நடந்த உப தலைவர் தேர்தலில் ஹரிரோஸ், பெண்டியாலா, லிங்கப்பா ஆகிய மூவரும் உப தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டம் வெகு அமைதியாகவும் — சிறப்பாகவும் நடந்தது. கூட்டத்திற்குத் தலைமை வகித்த சித்தூர் நாகையா, "இசைவல்லுனர்களாகிய நாம் தயாரிப்பாளர்களுடனும்—மற்றும் தொழில் துறையில் சம்பந்தப்பட்டோருடனும் நல்ல ஒத்துழைப்புடன் நடக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

'டூரிங்' கொட்டகை

டூரிங் சினிமாக் கொட்டகைக்காரர்களுக்கு பெரும் பீதியையும் பழுத்தையும் தந்துவந்த சென்னை அரசினரின் உத்திரவு தற்போது திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. முன்னைய உத்திரவில் டூரிங் கொட்டகைகள் 200 கெஜ தூரத்திற்கு வேறு கட்டிடங்கள் எதுவுமில்லாத இடத்தில் அமைக்கப்பட வேண்டும் எனக் கண்டிருந்தது. ஆனால் இப்போதைய உத்திரவு, 40 கெஜ தூரத்திற்கு வேறு கட்டிடங்கள் இல்லாமலிருக்கும் இடத்திலும் டூரிங் கொட்டகை அமைக்கலாம் எனக் கூறுகிறது.

மேல் நாட்டுப் பயணம்

தென்னகத்திற்கே உரிய பரத நாட்டியத்தை மேல் நாடுகளின் நடன அரங்கங்களில் ஆடிக்காட்டிட சினிமா நடிகை வைஜயந்திமாலா இம்மாதம் 20-ந் தேதி ஐரோப்பாவிற்குப் புறப்பட்டுப் போனார்.

தலை சிறந்த கலைகளின் தொட்டில் எனப் பாராட்டப்படும் பாரீஸ் நகரத்தில் நடக்கவிருக்கும் சர்வதேசக் கலைவிழாவில் கலந்து கொண்டு 5 நாட்கள் நடனமாடுவார், வைஜயந்தி மாலா.

அந்தக் கலை விழாவை முடித்துக்கொண்டு ஜெனிவா, லண்டன் ஆகிய நகரங்களில் தமிழ் நாட்டின் ஒப்புயர்வற்ற நடனக் கலை விருந்தை அந்நாட்டு மக்களுக்கு அளிப்பார். வைஜயந்திமாலாவுடன் அவரைச் சார்ந்த நடனக்குழுவும், டைரக்டர் சுப்பிரமணியமும் செல்கிறார்கள்.

இதையொட்டி சென்னை நகரில் நடந்த வழியனுப்பு விழாவிற்கு அ. பொ. அரசு தலைமை வகித்தார். தமிழ் நாட்டின் நடிகர்களும் நடிகைகளும் பாராட்டிப் பேசினர். மேயர் அ. பொ. அரசு பேசுகையில், "தமிழ்ப் பண்பாட்டை மேல்நாடுகளில் பரப்பும் இம்முயற்சியை வைஜயந்திமாலா நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வார் என நினைக்கிறேன். இவ்விதம் அவர் மேல்நாடு செல்வதும், நம் பண்பாடு அங்கெல்லாம் பரவுவதும் நாம் பெருமை கொள்ளத் தக்க நிகழ்ச்சிகள் ஆகும்! மேலும் நகரத்தின் காவலன் என்ற முறையில் சென்னையிலிருந்து இவர்களை வழியனுப்பி வைப்பதில் நான் பெருமையடைகிறேன்!" — என்று குறிப்பிட்டார்.

★

இதற்கு முன்பே நடன நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக சிங்கப்பூருக்குச் சென்றிருக்கிற பத்மினி—ராகினி சகோதரிகள், தங்களின் நடன நிகழ்ச்சிகளை பெரும் பாராட்டுக் கிடையே முடித்துக் கொண்டார்களாம். அதோடு 'சிங்கப்பூர்' என்ற பெயரிலே அங்கு தயாரிக்கப் படுகின்ற இந்தி மொழிப் படத்தில் இப்போது நடித்துக்கொண்டிருக்கிறார்கள். கதாநாயகராக நடிக்கும் ஷம்மி கபூர் பம்பாயிலிருந்து சிங்கப்பூருக்குச் சென்றிருக்கிறார்!

வியப்பூட்டும் வளர்ச்சி!

இந்தியத் திரைப்படத் துறையின் வளர்ச்சி பற்றிய புள்ளி விபரம் இது:

1. 1931-ல் இந்தியா முழுதும் தயாரான படங்களின் எண்ணிக்கை 28 தான்! 1959-ல் தயாரான, மொத்த படங்களோ 295 ஆகும்!

2. 1956—57-ம் ஆண்டில் இந்தியா முழுதிலும் திரைப்பட கொட்டகைகளில் வசூலான மொத்தத் தொகை கிட்டத்தட்ட 32 கோடி!

3. இந்தியாவிலே உள்ள மொத்தபடப்பிடிப்பு நிலையங்கள் 63 ஆகும்! அவைகளில் மேற்குப் பகுதியில் 28; கிழக்குப்பகுதியில் 11; தெற்கே 24 இருக்கின்றன!

'சிவகெங்கைச் சீமை'யில் முஸ்தபாவும், குமாரி கமலாவும்!

கலப்படம்

'கனம்' இலேசாகலாமா?

"எனக்குத் தமிழ்ப் பாடல்களே புரிவதில்லை!"

—கூறியவர், கனடா தேசத்துக் கனவான் என்று நினைக்கிறீர்களா?

அல்லது, தேம்ஸ் நதி தீரத்துத் துரை மகன் என்று கருதுகிறீர்களா?

அப்படி யாரும் இல்லை—நம்மவர்தான்; நம் அமைச்சர்தான்; கனம் பக்தவத்சலனார்தான்!

ஊட்டியிலே மேல் நாட்டு உடை அணிந்தாராமே; அதனால் ஆங்கில மோகம் ஏற்பட்டு ஏற்பட்டுவிட்டதோ, இனி ஆங்கிலப் பாடல்தான் புரியுமோ — என்று கேட்கிறீர்களா?

இல்லை! இல்லை! அவர் கூறியது 'கோவில்களில் கூறப்படும் தமிழ்ப் பாடல்கள் புரிவதில்லை' என்றுதான்! ஆகவே, ஆங்கில நாட்டுப் 'பிரிட்டானிக்கா ராகத்தில் பேண்டு வாத்தியத்தோடு பரமசிவனை வணங்கலாம்' — என்றுஅவர் சொல்லியிருக்கமாட்டார்!

அவர் இப்படிக் கூறியதன் காரணம் கோவில்களில் தமிழில் அர்ச்சனை வேண்டுமென்பவர்களின் வாதத்தைத்'தவிடுபொடி'யாக்குவதற்குத்தான்! தனக்குத் தெரியவில்லை என்ற ஒரே காரணத்தைக் காட்டி எதிர்க்கிறார்; வடமொழியில் அர்ச்சனை செய்வதை ஆதரிக்கிறார்!

புரியாத மொழியில் நாம் ஏன் அர்ச்சனை செய்ய வேண்டும்? சித்தர்கள் பாடிய தமிழில் பாசுரம் பாடினால் கடவுளின் காதுக்கு எட்டாதா? 'கடவுளின் மக்களாகிய நம்முடைய மொழி, தந்தையாராகிய கடவுளுக்கே புரியாதா? அவரவர் மொழிகளில் வழிபடுவதை மற்ற மதங்கள் தடுப்பதுண்டா?

—ஆகிய இக் கேள்விகளுக்கு விடை தரவே இல்லை! இருந்தும் எதிர்ப்புக் காட்டுகிறார் தமிழ் மொழி அர்ச்சனைக்கு!

தமிழிசை மாநாடுகளில் சொற்பொழிவுகள் ஆற்றியவர் —

பல கவியரங்களுக்குத் தலைமை கூடத் தாங்கியவர் —

கம்பர் திருவிழா, திருப்பாவை —திருவெம்பாவை, திருமுறை வெளியிட்டு விழா முதலிய 'தமிழிசையால் கடவுளை வழிபடுவோரின்' திருக் கூட்டங்களுக்குத் தலைமை வகித்தவர்—

'வானமளந்தது அனைத்தும் அளந்த தமிழ் மொழி வாழியவே' என்று பாடிய பாரதி விழாக்களிலும் பங்கு எடுத்தவர்—

அவர்தான்.......அந்தோ பரிதாபம்! ஏனோ தமிழை இகழ்கிறார்; வடமொழிக்கு வக்காலத்து வாங்குகிறார்!

எல்லா விஷயத்திலும் வடக்கிற்கு அடிமையாகவே இருந்து விட்டு, இந்த 'அர்ச்சனை விஷயத்தில்' ஏன் எதிர்க்க வேண்டும் என்ற 'பரந்த மனோபாவமோ' என்னவோ?

இந்தத் தமிழ் உணர்வை மட்டும் அவர் எதிர்க்கவில்லை; வடவரின் 'மொழிவெறி'யையும் எடுத்துக் காட்டியிருக்கிறார். மைல்கற்களில் இந்தி எழுத்துகளை எழுதும் வடவரின் வெறி பற்றிப் பேசினார்.

—இப்படிப் பேசிய கனம் பக்தவத்சலம், "ஆகவே வெறிபிடித்த வடவர்களுடன் நமக்குத்தொடர்பு வேண்டாம். வெட்டிக் கொள்வோம் உறவை!" — என்று கூறினாரா?

இல்லை; இல்லை.

அப்படி உண்மையைப் பேச அவருக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது?

வடவர்களின் மொழி வெறியைத் தாக்கிய அதே வாயால், தமிழரின் 'மொழி வெறியை'த் தாக்கியிருக்கிறார்!

பண்பாட்டாலும் மொழியாலும் முரண்பட்ட வேறோர் நாட்டின் மைல்கற்களில் உள்ள எழுத்துகளை மாற்றுவதும் மொழிவெறி!

தங்கள் நாட்டு ஆலயங்களில் தங்கள் மொழியில் வழிபடுவதும் மொழிவெறி!

பக்தவத்சலனாரே! கொஞ்சம் உணர்ந்து பாருங்கள்!

இருந்த சிறப்பை இழந்துவிட்டு, இன்று அடிமை மக்களின் மொழியாய்த் திகழும் தமிழ் மொழியை ஏதோ ஆலயங்களில் மாத்திரம் உலவவிடும் 'தமிழ்ப் பற்று'க்கும் மொழிவெறிப் பட்டம் சூட்டுவது சரியா எனச் சிறிது சிந்தியுங்கள்!

தென்காசியில் தென்னவர் சேனை!

* * *

சேனருவியில் தலைநனைக்க விரும்புவோர் — தென்றலைத் தீண்டி இன்பம் காண வருவோர்—தீயைக் கையிலேந்தி ஆடும் எம்பிரானைத் தரிசிக்க வருவோர் — இப்படிப்பட்டவர்களையே கண்டு கொண்டிருந்த குற்றால மலைச்சாரல் இந்தவாரம் 'புதுமையாளர்கள்' பல்லாயிரவரைக் கண்டிருக்கிறது.

ஆம்; தென்பாண்டி மண்ணில் நெல்லை மாவட்ட தி. மு. கழகத்தின் மூன்றாவது மாநாடு குற்றாலத்தின் காலடியில்—தென்காசியில் நடைபெற்றது.

முப்புறம் கடல் முரசடிக்கும் முதுதமிழ் நாட்டையாண்ட மூவேந்தர்களின் 'நகரஉலாவை' நினைவுபடுத்தியது, சிங்க இளைஞர்களின் சீரும் சிறப்பும் பெற்ற ஊர்வலம்!

'கறுப்பை' விரட்டும் 'சிவப்பு' வண்ணம் கொண்ட இரு வண்ணக் கொடியை, 'திராவிட நாடு திராவிடருக்கே' என்ற ஆயிரக் கணக்கானவரின் இதய கீதத்துடன் ஏற்றி வைத்தார் மாநாட்டுத் தலைவர் என், வி. நடராசன்.

திராவிடப் பண் முழங்கியதை அடுத்து, வந்திருந்தோருக்கு வெல்லச் சொல் தந்து வடவரை வெல்லச் சொல் தருவீர் என்ற வேண்டுகோளோடு வரவேற்றார், நெல்லை தந்த நல் முத்து, நெஞ்சுரம் கொண்ட மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் டி. ஆர். சுப்ரமணியம்!

இவர் தலைமையில் இயங்கிய இக்குழு வந்திருந்தோர் அனைவரின் பாராட்டுதலைப் பெற்றது. இரத்தினமும், முத்தும், பொன்னும் படைத்த சீமான்களும் துரைமார்களும் நம்மிடம் இல்லைதான். ஆனால் அவற்றைவிட மதிப்புள்ள...மேலான செயற் சிங்கங்கள் உண்டு என்பதை நிரூபித்தார்கள், மாநாட்டுச் செயலாளர்களான இரத்தின வேலுப் பாண்டியனும், துரை மாறனும், பொருளாளர் சண்முகமும்!

தமிழ்கூறிய நல்லுலகம் இன்று டில்லிக்காரனின் புகழ்கூறும் அடிமைக் காடாய்ப் போய்விட்ட நிலை குறித்தும் அது மாறித் தீர வேண்டிய அவசியம் குறித்தும் அழகுநடைபோடும் தமிழ் முழக்கி நெல்லைமாவட்ட மாநாட்டைத் திறந்து வைத்தார் தோழியர் இளமுருகு பொற்செல்வி.

பலரும் பாராட்டிப் பேச மாநாட்டுத் தலைமை தாங்களழுந்தார். காலத்தால் வீழ்ந்து விட்ட திராவிடரைக் கைதூக்கி விட வந்த முன்னேற்றக் கழகத்தின் துணைப்பொதுச் செயலாளராம் என். வி; நடராசன்.

வடவரின் ஏகாதிபத்தியம் சாவுக்குழி நோக்கி விட்ட வகையைச் சுட்டிக்காட்டி விடுதலை கீதத்தை உரை நடையில் தந்தார், மாநாட்டுத்தலைவர்,

கழக முன்னணி வீரர்களும் நடிகர்களும் தனித்தனித் தலைப்புகளில் சீனிப் பந்தலில் தேன் மழை பொழிந்ததோ—இல்லை தரையுடன் கும்மியடிக்கும் அலை கடலும், திறந்து கிடக்கும் வாயுள்ள எரிமலையும் பொங்கி எழுந்து ஆர்ப்பரித்ததோ என எண்ணும் வண்ணம் கருத்தமைந்த சொற்பெருக்காற்றினர்கள்.

அன்றிரவு மு. கருணாநிதி எழுதி நடிக்கும் கொள்கை விளக்க நாடகமாம் முரசு நாடக மன்றத்தாரின் 'உதய சூரியன்' நடைபெற்றது.

பின்னர் அடுத்த நாள் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின்னர் நாவலரும் கழகக் காவலருமான இரா. நெடுஞ்செழியன் பேச எழுந்தார். மேடையில் வீசிற்று, மெல்லிய தமிழ்ப்பூங்காற்று. கருத்துக்கனிகள் குலுங்கி விழுந்தன. மாற்றார் தாக்கத் தாக்க நாம் மலைபோல் வளர்ந்து வரும் நிலை பற்றியும் நம் முன்னிற்கும் கடமைபற்றியும் அரிய விளக்கம் தந்தார்.

மாநாட்டில் ரூபாய் பத்தாயிரம் செலவு போக மீதமாயிற்றுஎன்ற அறிவிப்பிற்குப் பின்னர், திராவிடநாட்டின் ஒரே ஒரு அரசியல் ஆசான் அறிஞர் அண்ணாவின் கருத்து வெள்ளம் மாநாட்டினர் செவி புகுந்து சிந்தை மகிழ வைத்தது. போராட்டத்தில்புண்கள் பெற்ற கழகத்திற்கு—தியாகத் தீயில் புடம் போட்டு எடுக்கப்பட்ட கழகத்திற்குப்பொறுப்புகள் பல வந்துள்ளன; அவற்றைப் பொறுப்புடன் எப்படிப் பாதுகாப்பது என்பதைக் குடும்பத் தலைவனுக்கே உரிய கனிவு நிறைந்த கட்டளைக் குரலில் எடுத்தோதினார், . அறிஞர் அண்ணா அவர்கள்.

இரவில் நாகூர் அனிபா அவர்களின் இன்னிசை நிகழ்ச்சிக்குப் பின்னர் மாநாடு இனிது முடிந்தது.

மேயரின் நற்பணி!

★

இட்லர் பரம்பரை என நிலைக்கண்ணாடியின் முன் நின்று கொண்டு நம்மைப் பார்த்துக் கூவியோர்—

"இல்லை, இல்லை! இவர்கள் இட்லரை எதிர்த்த ஆங்கிலேயர்கள் பாதம் தாங்கிகள்"—என்று ஆங்கிலேயன் பாதம் தாங்கியே காய்த்துவிட்ட தம் கைகளை மறைத்துக் கொண்டு பேசியோர்—

"அரசுக் கட்டிலில் ஏறட்டும் இவர்கள்; என்ன பாடுபடுகிறார்கள் பாருங்கள்." எனப் பொறாமையில் வெந்து புலம்பியோர்—

"சின்னஞ்சிறுசுகள்!என்னதெரியும் இதுகளுக்கு?"—என்ற தம் அரசியல் கிழட்டுத் தனத்தைக் காட்டிக் கொண்டோர்—

அத்தனை பேர் முகத்திலும் கரிபூசி விட்டு 'ஜனநாயகப் பாதை இதோ பாரீர்; மக்களாட்சிப் பண்பு இது வல்லவோ?' என்று நல்லவர்கள் வாழ்த்த ஆட்சித் துறையில் பீடு நடைபோடுகிறது, சென்னை மாநகராட்சி மன்றம்!

ஆம்; நாம் பதவியேற்ற பிறகு நடந்தவை அற்புதங்களல்ல; ஆனால் நடக்க வேண்டியவை! நாட்டிற்குத் தேவையானவை! அத்தகைய 'ஜனநாயகப்பணியிலே' ஒன்றுதான், கருத்தறிவிக்கும் பெட்டி நிறுவிய செயல்!

சென்னை நகர மக்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு ஏதுவாக ஒரு 'கருத்தறிவிக்கும் பெட்டியை' நகராட்சி மன்ற வாயிலில் வைத்திருக்கிறார் நகரத் தந்தை—நம்மவர், அரசு!

ஆம்; ஜனநாயகக் கதிரொளி பரவுகிறது!

குறை கூறவேண்டுமென்றே கங்கணம் கட்டித் திரிபவர்கள் காரிருளில் மறைகிறார்கள்!!

★ **தொழில் துறையில் துரோகம்:** ★

எஃகுத் தொழிலில் மோசடி!

ஒரு நாட்டின் சிறப்பான தொழில் வளர்ச்சிக்கு இரும்பும் நிலக்கரியும் முக்கிய அடிப்படைத் தேவைகளாகும். ஒளி காண்பதற்கு இரு கண்களைப் போல் நாடு முன்னேற்றங் காண இரும்பும் நிலக்கரியும் தேவைகளாகும்.

பாலங்கள் அமைக்க, இரயில் பாதைகள்போட, கப்பல்கள், இரயில்கள், கார்கள், இயந்திரங்கள், இன்னபிற ஆயிரமாயிரம் பொருட்களை உருவாக்க இரும்பு முக்கியப் பொருளாக விளங்குகின்றது. எனவே, நாட்டின் அடிப்படைத் தேவைகளை நிவர்த்திக்கவும், உறுதியான தொழில் முன்னேற்றமடையவும் இரும்பு உற்பத்திப் பெருக்கம் அவசியமாகும்.

இந்தியாவில் சுமார் 2130 கோடி டன்கள் இரும்புத் தாதுப் பொருள் கிடைக்கும் என்று நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றது. 1954ம் ஆண்டில் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள 43 லட்சம் டன்கள் இரும்பு மூலப் பொருள் கிட்டியது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் 130 லட்சம் டன்கள் இரும்புத் தாதுப் பொருள் கிடைக்க வேண்டும் என்று இலட்சியம் குறிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கிடைக்கும் இரும்புத் தாதுப் பொருளில் 64 சதவிகிதம் இரும்பு இருக்கிறது. ஆனால் ஐரோப்பாவில் கிடைக்கும் இரும்புத் தாதுப்பொருளில் 40 சதவிகிதம் இரும்பும், அமெரிக்காவில் எடுக்கப்படும் இரும்புக் கனியில் 50 சதவிகிதம் இரும்புமே அமைந்துள்ளது; எனவே இந்திய இரும்புத்தாதுப் பொருள் உலகிலேயே மிகச் சிறந்த ரகத்தைச் சார்ந்ததாகும்.

தமிழகம், ஆந்திரம், மைசூர் ஆகிய திராவிடப் பகுதிகளில் இரும்புத் தாதுப்பொருள் நிறையப்புதைந்து கிடக்கின்றது. என்றாலும், அது பெரும் பகுதி சரிவரப் பயன்படுத்தாத நிலையில் வறிதே சோம்பித் துயில்கின்றது. குருடனால் அழகை அனுபவிக்க இயலாது; செவிடனால் இசையைச் சுவைக்க முடியாது; அது போன்றே, அடிமை நாடு தன் இயற்கைச் செல்வங்களைப் பயன்படுத்தி தொழில் முன்னேற்றம் காண இயலாது.

எனவேதான் எல்லா நிலைமைகளிலும் பின் தங்கியிருப்பதைப் போலவே, இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் வடக்கில் வளமாய் வளர வழி வகைகள் செய்யப்பட்டிருக்கின்றனவே தவிர, தெற்கிலும் அவை செழித்தோங்க எதும் ஆற்றப்படவில்லை.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் துவங்குவதற்கு முன்னர் 1951ம் ஆண்டில், வடநாட்டில் தனியார் துறையில் டாட்டா இரும்பு — எஃகு கம்பெனியும், இந்தியன் இரும்பு—எஃகு கம்பெனியும் இருந்தன. மைசூர் அரசாங்கம் பத்ராவதியில் மைசூர் இரும்பு எஃகுத் தொழில்களை நடத்தி வந்தது. ஆக, இந்தியத் துணைக் கண்டத்தில் 1951–ல் மூன்று இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் இருந்தன.

இந்த மூன்று தொழிற்சாலைகளிலிருந்தும் 1950ல் 9.8 லட்சம் டன்கள் எஃகு உற்பத்தியாகியது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்காமல் இருந்துங்கூட 67 லட்சம் டன்கள் எஃகு கூடுதலாக உற்பத்தியாக வேண்டும் என வரையறுக்கப்பட்டது. என்றாலும் முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்த 1956ம் ஆண்டில் 3 லட்சம் டன்கள் எஃகுதான் கூடுதலாக உற்பத்தியாக முடிந்தது.

தனியார் துறையில் நடைபெற்றுவரும் இரண்டு இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளையும் விரிவுபடுத்தி எஃகு உற்பத்தியை அதிகரிக்க 43 கோடி ரூபாய் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் செலவாகியுள்ளது. மைசூர் எஃகுத் தொழிற்சாலையை விரிவாக்க 3 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுங்கூட ஒன்றரைக்கோடி ரூபாய்தான் செலவழிக்க முடிந்தது.

சி. ஜம்பு

இப்படியாக, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளுக்காக வடநாட்டிற்கு ரூ. 43 கோடி செலவாக, தென்னாட்டிற்கு ஒன்றரைக்கோடி ரூபாய் செலவாகிய தன் மூலம் திராவிடம் புறக்கணிக்கப்பட்டது.

வடநாட்டில் உள்ள இரண்டு தனியார் இரும்புத் தொழிற்சாலைகளும் மிகப் பெரியனவாகும். ஆனால் மைசூர் இரும்புத் தொழிற்சாலையோ முன் சொல்லியதற்கு மாறாக மிகச் சிறியதாகும்.

'இந்தியத் தொழிற்சாலைகள்' எனும் புத்தகத்தின் 1959-ம் ஆண்டு 4-ம் பதிப்பில் மேற்கண்ட தொழிற்சாலைகளின் மூலதனம், உற்பத்தி விபரம் தனி இடத்தில் தரப்பட்டுள்ளது.

எனவே, வடநாட்டு இரும்புத் தொழிற்சாலைகளின் கூடுதல் மூலதனம் நாற்பத்தொன்பதரைக்கோடி ரூபாயாகும். அவைகளின் எஃகு உற்பத்தி பத்தரை லட்சம் டன்களாகும். ஆனால், திராவிடத்தில் உள்ள அந்தச் சின்னஞ்சிறு தொழிற்சாலையின் மூலதனமோ 5 கோடி ரூபாய்தான். உற்பத்தியாகும் எஃகோ 60 ஆயிரம் டன்களே ஆகும். ஆக, மூலதன ரீதியில் வடநாட்டு இரும்புத் தொழில் 10 மடங்கு பெரியதாகவும், உற்பத்தி ரீதியில் 18 மடங்கு பெரியதாகவும் தென்னாட்டு இரும்புத் தொழிலை விட விளங்குகின்றது.

இந்த மோசமான ஏற்றத் தாழ்வு நிலையில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் உருவாகியது. அடிப்படைத் தொழில்கள் இந்தியாவில் உறுதியாக வளர, இரும்பு உற்பத்தியில் அதிக நாட்டம் செலுத்த வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் திட்டம் தீட்டப்பட்டது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 30 லட்சம் டன்கள் எஃகு கூடுதலாக உற்பத்தி செய்யப்பட்டு, 1961ம் ஆண்டில் இந்தியாவில் எஃகு உற்பத்தி 43 லட்சம் டன்களாக விளங்க வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டது.

பொதுத் துறையில் ரூ. 350 கோடி செலவழிப்பதென்றும், தனியார் துறையில் ரூ. 115 கோடி செலவாகுமென்றும் முதலில் முடிவாகியது. மைசூர், இரும்பு எஃகுத்தொழிலுக்கு ரூ. 6 கோடி செலவழிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திட்டச் செலவில் பல்வேறு மாறுதல்கள் எதிர்பாரா நெருக்கடிகளின் விளைவாக ஏற்பட்டதின் காரணமாய், இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளுக்கான செலவும் அதிகமான அளவில் கூடுதலாகியது. ரூர்கேலா, பிலாய், துர்க்காபூர் ஆகிய இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளுக்கு மட்டில் ரூ. 350 கோடியிலிருந்து ரூ. 530 கோடிக்கு செலவு உயர்ந்தது. தனியார் துறைக்கு ரூ. 115 கோடி முதலில் ஒதுக்கப்பட்டிருந்தாலும், டாட்டா, இரும்பு, எஃகு கம்பெனிக்கு மாத்திரம் ரூ. 133 கோடி தற்பொழுது செலவாகும் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

திட்டம் திண்டாட்ட நிலையிலிருந்தாலும், வடநாட்டைப் பொறுத்தளவில் இப்படி இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளுக்கான செலவு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து கொண்டே இருக்கின்றது; ஆனால் திராவிடத்தில் புதிதாக ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை கூட உருவாக வழி எதும் செய்யப்படவில்லை.

சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமைய நல்வாய்ப்புண்டு என்று டில்லிப் பாராளு மன்றத்தில் தமிழக உறுப்பினர்கள் வாதாடி வருகின்றனர். இரும்பு உருக்குத்

(தொடர்ச்சி பக்கம்—12)

	பெயர்	இடம்	மூல தனம்	உற்பத்தி (டன்கள்)
1.	டாடா இரும்பு, எஃகு கம்பெனி	ஜாம் ஷெட்பூர்	35 கோடி	8 லட்சம்
2.	இந்தியன் இரும்பு, எஃகு கம்பெனி	ஹிராபூர்	14.4 கோடி	2·5 லட்சம்
3.	மைசூர் இரும்பு, எஃகு தொழில்கள்	பத்ராவதி	5·2 கோடி	60 ஆயிரம்

ஏன்?

நீதி சாகிறதே!

★

"எம். ஓ. மத்தாயின்மேல் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு நீதி விசாரணை தேவையில்லை என்று நான் கருதுகிறேன்!"

—இந்தப் 'பெருந்தன்மையான' முடிவு பண்டித நேருவின் திருவாயிலிருந்து பத்திரிகை நிருபர்களுக்கு முன்னே உதிர்ந்திருக்கிறது!

பிரச்னைக்குரிய இந்த மத்தாய் யார் என்கிறீர்களா?

அவர் சாதாரண மனிதரல்ல; பிரதமர் நேருவின் அந்தரங்கச் செயலாளராகப் பணிபுரிந்தவர்!

அவர்மேல் சுமத்தப்பட்ட குற்றங்கள் எவை என்கிறீர்களா? 'இப்படியும் நடக்குமா?' என்று மூக்கில் விரல்வைக்கும் நிலை ஏற்படுத்திய அவைகளின் பட்டியல் இதோ:

- முதலில் சாதாரண 'டைப்பிஸ்ட்'டாக வேலைக்கு வந்தார்; குறுகிய காலத்தில், பெருந்தனக்காரராக மாறி விட்டார்!
- 'பல வழி'களில் ஈடுபட்டு பிர்லா முதலிய வணிகத் திமிங்கலங்களுடன் நெருங்கிய—இரகசியமான தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார்!
- அவர் பெயரில் பிரம்மாண்டமான பங்களாக்கள் பல இன்று இருக்கின்றன! திராட்சைத் தோட்டங்கள் பலவற்றை விலைக்கு வாங்கியிருக்கிறார்!
- தன்னுடைய அன்னையின் பெயரால் அற நிறுவனம் ஒன்றை அமைத்து 25 இலட்சம் ரூபாய்வரைச் சேர்த்துக் கொண்டார்!
- இந்த 'இரகசியங்கள்' எல்லாம் அம்பலத்திற்கு வந்தவுடன் தன் பதவியை ராஜினாமா செய்யத் துணிந்தார்!

—இப்படியெல்லாம் ஆதாரத்தோடு குற்றம் சுமத்தினார்கள், பாராளு மன்றத்தில், பண்டிதரின் அந்தரங்கச் செயலாளரின் போக்கில் இத்தகைய அபத்தங்கள் காணப்படலாமா என்று வினவினார்கள்; 'நீதி தேவை' என்று குரல் கொடுத்தார்கள்!

உள்ளபடியே ஜனநாயகத்திற்கு மதிப்பு தருகிற அரசாக இருந்தால் — எதிர்க்கட்சியினர் வேண்டுகோளுக்குச் செவிமடுக்கத்தான் வேண்டும் என்ற கண்ணியமிருந்திருந்தால் — அந்த மத்தாய் இன்று குற்றக் கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்!

ஆனால் காத்திருந்த மக்களுக்கு கண்ணியத்தின் காவலரிடமிருந்து இப்போது திடுக்கிடும் செய்தி வருகிறது....

"நீதி விசாரணை தேவையில்லை—அதற்கு அவசியமே இல்லை!" என்று!

நீதிக்கு எதிராக—நேர்மைக்கு இழுக்காக—ஏன் ஏற்பட்டது இந்த முடிவு?

ஏன்?...ஏன்?

சுழல் விளக்கு

மாலுமி

பிரேமா சாமுவேல்; பண்ருட்டி

(?) நேருவின் வாய் எப்போது ஓயும்?

அதற்கு ஒரே ஒரு கட்டம்தான் உண்டு. திராவிடம் தனியரசு பெற வேண்டும்! இன்று அவரது வாயில் இருபத்தி நான்கு மணி நேரமும் ஒலித்துக் கொண்டிருப்பது 'இந்திய ஐக்கியம்' தானே!

எஸ். மாணிக்கவேலு; லால்குடி.

(?) இந்தியாவில் அரசியல் குழப்பவாதி ஒருவரின் பெயரைச் சொல்ல முடியுமா?

பெயரை மட்டுமல்ல; அவரது 'பெயர்போன' அரசியல் சூதாட்டமும் 'ஜெகப்பிரசித்தி' பெற்றதாயிற்றே! கோலெடுத்தால்குரங்காடும் என்பார்கள்; ஆனால் குணங்கெட்ட நேரத்தி லெல்லாம் 'பல்டி' அடித்துக் கொண்டிருப்பவர், இந்த ஜெயப்பிரகாஷ் நாராயணன்!

நம்பியிருந்த கட்சிக்காரர்களை யெல்லாம் நட்டாற்றில் விட்டு விட்டு, இப்போது பூதானத்திற்குத் தன் 'ஜீவன்தானம்' செய்துவிட்டு, தன்னைப் புனிதப்படுத்திக் கொண்டு விட்டதாக அறிவித்திருக்கிறார், இவர்.

ஆனால், ஆரம்பத்தில் அகில இந்தியக் காங்கிரஸ் தலைவராக இருந்து; பின்னர் காங்கிரஸ் சோஷலிஸ்ட் ஆகி; அடுத்த கட்டத்தில் பிரஜா சோஷலிஸ்ட் ஆகி; இப்போது சர்வோதயத் தலைவராக மாறி யிருக்கிறார்! நிறம் மாறும் இப் பச்சோந்தியின் பேச்சும் கணத்திற்குக் கணம் மாறிக் கொண்டுதான் இருக்கும்!

திடீரென்று, "சோஷலிசம் என்பது வெறுங்கனவு! இந்திய அமைப்பு முறை வேறு; இதற்கு கிராம சுயராஜ்யமே சிறந்தது" என்பார்; மறுநாள் பிரஜா சோஷலிஸ்டுகளின் இரகசியக் கூட்டத்தில் பேசினார் என்று செய்திவரும்!

"கட்சி அரசியலே இந்தியாவிற்குச் சாபக்கேடு!" என்று முனிவரைப்போல் குரல் எழுப்புவார் ஒரு நாள்; மறு நிமிடமே "இந்தியாவில் நல்லதொரு எதிர்க்கட்சி தேவை!" என்று முழங்குவார்!

இவரைவிட ஒரு அரசியல்சூதாட்டக்காரரை நீங்கள் இந்தியாவில் மட்டுமல்ல; வேறு எந்த நாட்டிலேயும் வலை போட்டுத் தேடினாலும் காணமாட்டீர், தோழரே!

மு. கருப்பண்ணன்; திருப்பூர்

(?) மணியார்டர் கூப்பனில் இந்தி! இப்போது மைல் கல்லில் இந்தி! அப்புறம்.......?

இங்கிருக்கும் ஏமாளிகள் இனியும் அனுமதித்தால், அவர்கள் கல்லறைமீதும் இந்திதான்!

கமுதி. கரீம்; மதுரை.

(?) உள் நாட்டமைச்சர் பந்தைக் கண்டு உரையாடினராமே காமராசர்; எந்த பாஷையில் பேசியிருப்பார்?

பந்த்துக்குத் தமிழ் தெரியாது; காமராசருக்கு ஆங்கிலம்அரை குறை! ஆகவே அடிமை, 'ஆண்டை'யிடம் எந்த பாஷையில் பேசுவானோ அப்படித் தான்!

பி. தயாநிதி; சென்னை—23.

(?) கோயங்கா என்பவர் யார்?

அவர் ஒரு 'எக்ஸ்பிரஸ்'! நம்பி ஏறிய 700 குடும்பங்களை நட்டாற்றில் கவிழ்த்துவிட்ட 'அரியலூர் வண்டி'!

பி. பஞ்சு; டேராடூன்.

(?) ராஜ்பவன் எங்கேயிருக்கிறது?

அரசனை ஆண்டியாக்கும் அற்புத சக்தி படைத்த குதிரைப் பந்தய மைதானம் இருக்கிறதே சென்னை, கிண்டியில் — அங்கேதான் ஆண்டொன்றுக்கு ஒன்பது இலட்சத்தை விழுங்கிக் கொள்ளும் கவர்னர் துரையின் 'சிறுகுடில்' — ராஜ்பவன்—இருக்கிறது!

கோமதிநாயகம்; சென்னை—4.

(?) சென்னை நகரசபைத் தேர்தலின்போது 'ஜனசங்கம்' என்று ஒரு பெயர் அடிபட்டதே! என்ன ஆயிற்று?

அது அடிபட்டுப் போயிற்று! நகரத்து மக்கள் தேர்தலுக்கு சில நாட்களுக்கு முன்பு வீட்டுச் சுவர்களில் திடீரென்று 'சுடர்' சின்னங்களையும் அவைகளின் கீழே 'ஜனசங்கம்' என்ற எழுத்துக்களையும் கண்டார்கள்! தேர்தல் நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் திட்டுவதற்கென்றே அந்தக் கட்சியின் தலைவர்கள் என்று சொல்லிக் கொண்ட சிலர் கூட்டங்கள் போட்டார்கள். ஆசை தீரத்திட்டினார்கள்; பலனில்லை; சுடர் அணைந்து விட்டது, நகரத்தைப் பொறுத்த வரையில். நின்ற எல்லோருமே தோல்வியைத் தழுவினார்கள்; 'டெபாசிட்' தொகையைக்கூட எல்லோரும் ஒட்டு மொத்தக் கூட்டாகத் 'தியாகம்' செய்து விட்டார்கள்!

★

மனிதனின் கதை

★

தொடர் கட்டுரை அடுத்த இதழில் இடம்பெறும்.

தொழில் துறையில்....

[11—ம் பக்கத் தொடர்ச்சி]

தொழிற்சாலை அமைய இரும்பும் நிலக்கரியும் அருகருகே கிடைக்க வேண்டும் என்றும், தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் நெய்வேலியில் நிலக்கரியும் சேலத்தில் இரும்புமாக சிதறி நீண்ட தூரம் இடையிலிருப்பதால். சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை உருவாக அவ்வளவு வசதியில்லை என்றும் காங்கிரஸ்காரர்கள் உளறி வருகின்றனர்.

டாட்டா இரும்பு எஃகு கம்பெனிக்கு இரும்புத் தாதுப் பொருள் 50 மைல் தூரத்திலிருந்தும், நிலக்கரி 100 மைல் தொலைவிலிருந்தும் வருகின்றன. பிலாய் இரும்பு உருக்குத் தொழிற்சாலைக்கு 50 மைல் தூரத்தில் உள்ள டாயில்—ராஜ்காரா என்ற இடத்திலிருந்து இரும்புத் தாதுப் பொருளும், 149 மைல் தொலைவிலுள்ள கோப்ராவிலிருந்து நிலக்கரியும் வருகின்றன. நெய்வேலிக்கும் சேலத்திற்கும் உள்ள தூரம் 96 மைல்களாகும். இருந்தாலும் சேலத்தில் இரும்பு உருக்குத் தொழிற்சாலை கூடாதாம்; தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் முன் மாதிரியாக வடநாட்டில் இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள் அமைந்திருக்க ஏன் சேலத்தில் கூடாது என்பது நமக்குப் புரியவில்லை.

மைசூர் இரும்பு, எஃகு தொழில்கள் மேலும் நல்ல முறையில் வளர இடமிருக்கின்றது; எனவே, கூடுதலாய் தொகை ஒதுக்கி தென்னாடும் முன்னேற உதவுங்கள் என பல முறை எடுத்துச் சொல்லியும் எவ்விதப் பயனும் இல்லை. திராவிடத்தின் நேர்மையான கோரிக்கைகள் டில்லி ஏகாதிபத்திய சர்க்காரால் கவனிக்கப்படுவதேயில்லை.

இத்துடன் நில்லாமல், வடநாட்டில் போக்காரா என்னுமிடத்தில் பொதுத் துறையில் மேலும் ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை அமைய ஆவன செய்யப்பட்டு வருகின்றது. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும் 1961-ம் ஆண்டில் 43 இலட்சம் டன்கள் எஃகு இந்தியாவில் உற்பத்தியாகும். தென்னகத்தின் பங்கு இதில் 1 லட்சம் டன்களாகும். நாற்பத்து மூன்றில் ஒரு பங்கு அல்லது சுமார் 2 சதவிகிதம் தான் எஃகு உற்பத்தியில் திராவிடத்தின் நிலையாகும். இந்தப் பிற்போக்கு நிலை போக, திராவிடம் தலை நிமிர்ந்து வாழ ஒரே வழி டில்லியின் ஆதிபத்தியம் ஒழிவதுதான் — அவ்வழியில் அயராது பாடுபடும் திராவிட முன்னேற்றக் கழகம் மேலும் வளர்ந்து வெற்றி பெறுவது உறுதி.

ரோமாபுரிப்...

[7-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறி, புலவர் அரண்மனைக்குப் புறப்பட்டார்.

தெருவில் நின்றிருந்த புரவி பூட்டிய பல்லக்கு வண்டியில் அவர் ஏறிக்கொண்டார். அந்த அழகிய வண்டி அரண்மனை நோக்கிப் புறப்பட்டது.

கரிகாலனும் பெருவழுதியும் புலவரை எதிர்கொண்டழைத்து இருக்கையில் அமர்த்தினர். புலவர் பெருமான் இருவரையும் ஒரு சேரக் கண்டு உவகை கொண்டார். கரிகாலனுக்கு வர இருந்த ஆபத்தையும், அது தவிர்க்கப்பட்டதையும் எண்ணுகின்றபோது அவரையறியாமல் ஒரு அச்சம் அவரை ஆட்டிப் படைத்தது.

அதை வெளிக் காட்டிக்கொள்ளாமல், "அழைத்த காரணம் யாதோ?" என வினவினார்.

"எமது நட்புறவை வாழ்த்துவதற்கே தங்களைஅழைத்தோம்!" என்றான் சோழர் திலகம்.

புலவர் சற்று கண்மூடி அமைதியாக இருந்தார். அவரது இதழ்கள் அசைந்தன. "தமிழ் வாழ்க!" என்றார். அதனைத் தொடர்ந்து தமிழ் மழை பொழிந்தது.

* "நீயே, தண்புனல் காவிரிக்
கிழவனை யிவனே...'

என்று பாட ஆரம்பித்தார்.

"நெல்லும் நீரும் எல்லார்க்கும்
எளியவென
வரைய சாந்தமும் திரைய
முத்தமும்
இமிழ்குரல் முரசம் மூன்றுடன்
ஆளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல்
வேந்தே!"

—என்று பெருவழுதிப் பாண்டியனை வாழ்த்தினார்.

"ஒற்றுமை குலைக்கப் பகைவர்கள் பல வழியும் முயல்வர். நண்பரைப் போலவும், நல்லன தேடுவோர் போலவும் பேசி இருவரிடமுள்ள ஒற்றுமையை மாய்க்கத் திட்டம் போடுவார். அவைகளுக்கு இடந்தராமல் இருவரும் நட்பு கொள்வீராக!" என்று அறிவுரை கூறினார். தன் வீட்டின்முன்னே நடந்த நிகழ்ச்சியை மனதில் வைத்துக் கொண்டுதான் புலவர் அங்ஙனம் கூறினார்.

"இன்று போல் என்றும் உமது உறவு தழைக்கட்டும்! நுமது வேல் வென்று வென்று போர்க்களத்தில் புகழொளி வீசட்டும்! நமது புலியும் கயலும் பகை நாட்டுக் குன்றுகளிலே செதுக்கப்படட்டும்!"

—எனப் புலவர், தன் நெஞ்சைத் திறந்து காட்டியபோது இரு மன்னர்களும் புலவரைத் தழுவிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் வடித்தனர்.

தொடரும்

* (புறம்:— 58-வது பாடல்)

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, முரசொலி அச்சகம், 1—128, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு